# தமிழக வரலாற்றுச் சின்னங்கள்

# தமிழக வரலாற்றுச் சின்னங்கள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-600 028

1 9 8 9

முதற் பதிப்பு—1989
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 102

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No.
Date
MADRAS

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# தமிழக வரலாற்றுச் சின்னங்கள்

விலை: ரூ. 2-50

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# பதிப்புரை

நம் இந்தியத் திருநாட்டில், கலைகளின் தாயகமாக விளங்கும் தமிழ்நாடு மிகப் பழங்காலம் தொட்டு பல்வேறு கலைகளுக்கு நிலைக்களனாகத் திகழ்ந்து வருகிறது. இன்றைக்கு நாம் கண்டு மகிழக் கூடிய அளவில் பல்லவர் காலக் கலைச் செல்வங்கள் முதல் பல எழிலார்ந்த கலைப் படைப்புகள் தம் கலைச் சிறப்புக்களைத் தாங்கி நிற்கின்றன. அவற்றில் சில கலனாகி முற்றிலும் அழிந்து விடக்கூடிய நிலையிலிருந்தன.

கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள், உல்லாச உப்பரிகைகள் எனப் பல்வேறுபட்ட வரலாற்றுச் சின்னங்கள் அவற்றுள் அடங்கும். அவை அனைத்தும் தம் காலக் கட்டடக் கலையின் நேர்த்தியையும், தம் கால மக்களின் கலையார்வத்தையும் தெளியக்காட்டும் கலைக் கண்ணாடிகள் ஆகும். அவற்றுள் சிலவற்றைத் தம் பழமைச் சிறப்புக்கு எவ்வித ஊறும் நேர்ந்து விடாமல் பாதுகாக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு அரசு தம் பொறுப்பில் கொண்டு பாதுகாத்து வருகிறது.

1966-ஆம் ஆண்டு தமிழகத்தில் இயற்றப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்புச் சட்டத்தின்படி, இதுவரை 48 வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகளைக் காணவரும் பொதுமக்களுக்குப் பயன்படத் தக்க வகையில், அவ்வரலாற்றுச் சின்னங்களின் வரலாறு, அமைவிடம், தங்கும் வசதி, உணவக வசதி உள்ள இடங்கள் ஆகிய செய்திகளை உள்ளடக்கிய சிறு நூலாக இவ்வேடு வெளியிடப்பட்டுள்ளது. தமிழக அரசால் பாதுகாக்கப்பெறும் கலைக் கருவூலங்களைக் கண்டு களிக்க இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

நடன. காசிநாதன்
இயக்குநர்

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்புரை | | |
| 1 | திருச்சி மாவட்டம் | ... | 1 |
| 2 | இராமநாதபுரம் மாவட்டம் | ... | 9 |
| 3 | வ. உ. சிதம்பரனார் மாவட்டம் | ... | 13 |
| 4 | செங்கற்பட்டு மாவட்டம் | ... | 17 |
| 5 | வடார்க்காடு மாவட்டம் | ... | 24 |
| 6 | தென்னார்க்காடு மாவட்டம் | ... | 31 |
| 7 | தருமபுரி மாவட்டம் | ... | 39 |
| 8 | கோவை மாவட்டம் | ... | 41 |
| 9 | சேலம் மாவட்டம் | ... | 43 |
| 10 | தஞ்சை மாவட்டம் | ... | 44 |
| 11 | மதுரை மாவட்டம் | ... | 47 |


★

# திருச்சி மாவட்டம்

## வேலாயுதம்பாளையம்

புகளூர் என்று அழைக்கப்படும் இவ்வூர், கரூர்—சேலம் நெடுஞ் சாலையில் 15 கி.மீ. தொலைவிலுள்ளது. திருச்சியிலிருந்து கரூர் வரையில் புகைவண்டி மற்றும் பேருந்து வசதிகள் உள்ளன. கரூரிலிருந்து பேருந்து மூலம் இவ்வூரை அடையலாம். உணவு மற்றும் தங்கும் வசதிகள் கரூரில் உள்ளன.

இவ்வூரில் உள்ள மலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல கல்வெட்டுக்கள் உள்ளன. சுமார் 1800 ஆண்டுகட்கு முற்பட்ட இக் கல்வெட்டுக்கள் தமிழி எழுத்தில் உள்ளன. இவற்றில் இரு கல்வெட்டுக்கள் சங்ககாலச் சேர மன்னர்களில் மூவரைக் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் ஏழு, எட்டு, ஒன்பதாம் பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்களாக முறையே செல்வக் கடுங்கோவாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ் சேரலிரும் பொறை ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். இம்மூவரும் மேற்கூறிய கல்வெட்டுக்களில் கோ ஆதன் செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ என்று வழி முறைப்படி குறிக்கப் படுகின்றனர். சங்க காலத்தில் ஓர் அரச குலத்தின் மூன்று தலைமுறைகளைக் குறிக்கும் கல்வெட்டு இதுவேயாகும்.

இவர்களில் இளங்கடுங்கோ, தான் இளவரசனாகப் பொறுப் பேற்ற பிறகு இம்மலையில் வாழ்ந்த சமணத் துறவியான செங்காயபன் என்பவருக்குப் பாழி (படுக்கை) அமைத்துத் தந்ததை இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இங்குள்ள மற்ற கல்வெட்டுக்கள் இங்கு வசித்த சமணத் துறவியர் பலரது பெயர்களையும், அவர்களுக்குப் படுக்கைகள் செய்தளித்தவர்களது பெயர்களையும் குறிப்பிடுகின்றன, அவற்றுள் பிட்டன், கொற்றன், கீரன், ஓரி போன்ற சங்கப் பெயர்களும், உப்பு வணிகன் பொன் வணிகன், அறுவை வணிகன் ஆகிய வணிகப் பெயர்களும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**உள்கோட்டை - மாளிகைமேடு**

இவ்வூர், உடையார்பாளையம் வட்டத்தில் ஜெயங்கொண்டம்-கங்கைகொண்டசோழபுரம் சாலையிலுள்ள குருவாலப்பர் கோயிலிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் தெற்கே உள்ளது. திருச்சியிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும், சேத்தியாதோப்பிலிருந்தும் பேருந்து மூலம் இவ்வூரை அடையலாம். உணவு, உறைவிட வசதிகள் சுமார் 8 கி.மீட்டர் தொலைவிலுள்ள ஜெயங்கொண்டத்திலும் கீழ் அணைக்கட்டிலும் உள்ளன.

சோழப்பெருவேந்தன் முதலாம் இராஜராஜனின் மைந்தன் முதலாம் இராசேந்திர சோழன் கங்கையாறு வரை சென்று தான் வெற்றி வாகை சூடியதன் நினைவாக கங்கைகொண்டசோழபுரம் என்ற தலைநகரையும் கங்கைகொண்ட சோழீஸ்வரம் என்ற கோயிலையும், சோழ கங்கம் எனும் ஏரியையும் இங்கு ஏற்படுத்தியுள்ளான்.

கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த இராசேந்திரன் ஒரு பெரிய அரண்மனை கட்டி வாழ்ந்தான். அந்த அரண்மனை இருந்த இடமே தற்போது மண் மேடிட்டு மாளிகை மேடு என்று அழைக்கப்படுகிறது. இங்கு இத்துறை அகழ்வாய்வுப் பணியை மேற்கொண்டு அந்த பெரிய அழகிய உறுதியான அரண்மனையின் அடித்தளப் பகுதிகளை வெளிக் கொணர்ந்துள்ளது. இவ்வாறு வெளிக் கொணரப்பட்ட பகுதிகளை அந்த நிலையிலேயே பாதுகாப்பதோடு, அங்கு கிடைத்த தொல் பொருட்களை உள்ளடக்கிய ஒரு சிறிய அகழ்வைப்பகத்தையும் அமைத்து இத்துறை பராமரித்து வருகிறது.

அரண்மனை செங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. சுவர் ஒவ்வொன்றும் ஒரு மீட்டர் அகலமுடையதாயும், சுமார் இரண்டு அல்லது மூன்று மீட்டர் உயரமுடையதாகவும் இருந்திருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. இவ்வரண்மனை பல அறைகளைக் கொண்டதாகக் காட்சியளிக்கிறது.

சுவர்ப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் சதுரமான கருங்கற்கள் பொருத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இக்கற்களின்

நடுவில் குழிவான பகுதியில் தூண்களை நிறுத்தியிருப்பார்கள் என்று ஊகிக்க முடிகிறது.

மேலும் இவ்வரண்மனை மேல் மாடியைக் கொண்டிலங்கியிருக்க லாம் என்பதற்குச் சான்றாக ஏராளமான இரும்பு ஆணிகளும் ஒன்றோடு ஒன்றை இணைக்கும் இரும்புப் பட்டைகளும் கிடைத் துள்ளன. மாடிப் பகுதி பெரும்பாலும் மரத்தால் அமைந்திருத்தல் வேண்டும்.

அரண்மனையில் சுதை வேலைப்பாடுகளும் வண்ண ஓவியமும் இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல சுதைச்சிற்பங்களும் வண்ணம் பூசப்பட்ட காரைகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தந்தத்தாலோ அல்லது எலும்பாலோ செய்யப் பட்ட பல அழகு வாய்ந்த கைவினைப் பொருட்களும் கிடைத் துள்ளன.

சோழர் காலத்தில் தமிழ் நாட்டோடு சீனர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதற்கு அடையாளமாகப் பல வண்ணம் தீட்டப்பட்ட பீங்கான் ஓடுகளும் இங்கு நடைபெற்ற அகழ்வாய்வின்போது கிடைத்துள்ளன. இப்பொருட்கள் அனைத்தும் இங்கு விரிந்த அளவில் அமைக்கப்பட இருக்கின்ற அகழ்வைப்பகத்தில் கண்டு பெருமிதம் கொள்ளலாம்.

## கீழையூர்

அரியலூர் வட்டம், திருச்சி-டால்மியாபுரம்-அரியலூர் சாலையில் திருச்சியிலிருந்து சுமார் 58 கி.மீ. தொலைவில் (அரியலூரிலிருந்து சுமார் 15 கி.மீ.) திருச்சிக்கும் அரியலூருக்கும் இடையில் மேலப் பழுவூர் என்னும் ஊர் அமைந்துள்ளது.

திருச்சியிலிருந்து அரியலூர் செல்லும் பேருந்து மூலமாக மேலப் பழுவூர் (கீழையூர்) என்ற ஊரில் உள்ள பேருந்து நிற்குமிடத்திற்கு எதிரிலேயே இக்கோயில் அமைந்துள்ளது. மேலப்பழுவூருக்கு சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள கீழப்பழுவூரில் நெடுஞ்சாலைத்துறை பயணிகள் விடுதி உள்ளது.

அவனிகந்தர்ப்பஈஸ்வர கிருஹம் என்று பொதுவாக அழைக்கப்படும் இக்கோயிலினுள் இரு கோயில்கள் அடுத்தடுத்து அமைந்து உள்ளன. இக்கோயில் கல்வெட்டு, ஒன்றை அவனி கந்தர்ப்ப ஈஸ்வர கிருஹம் என்றும் மற்றொன்றை அவனி காந்தர்வ ஈஸ்வர கிருஹம் என்றும் குறிக்கிறது. இக்கோயிலின் பெயர்களும் கல்வெட்டில் முறையே தென் வாயில் சிறு கோயில் என்றும் (தற்போது அகத்தீஸ்வரர் எனப்படுவது) வட வாயில் சிறு கோயில் என்றும் (தற்போது அருணாசலேஸ்வரம் என்று வழங்கப்படுவது) அழைக்கப் படுகின்றன.

கலைப் பாணியில் இக்கோயில் பல்லவர் காலத்திலிருந்து சோழர் காலத்திற்கு மாறும் கட்டத்தில் நிறுவப்பட்டது. முதலாம் ஆதித்தன் காலத்திய கற்றளி இது என்று திரு. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுவார்.

முதலாம் ஆதித்தனின் 13-வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இக் கோயிலில் உள்ளது. இவனது 22-வது ஆட்சி ஆண்டு கல்வெட்டில் பழுவேட்டரையன் குமரன் கந்தன் மற்றும் பழுவேட்டரையன் குமரன் மறவன் குறிக்கப்படுகின்றனர். எனவே இக் குமரன் கந்தன் மற்றும் குமரன் மறவன் சகோதரர்களாக இருக்கக்கூடும் எனத் தெரிகிறது.

நுழைவாயிலில் மேற்கு நோக்கி அமைந்துள்ள இரு துவார பாலகர் சிலைகள். கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சூரியன், கணபதி, சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் ஆகியோர் சிலைகள் தேவகோட்டங்களை அழகு செய்கின்றன.

வடக்குப் பக்கம் அகத்தீஸ்வரர் கோயிலை அடுத்து அருணா சலேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. அதே காலக் கட்டத்தில் நிறுவப்பட்டுள்ள இக்கோயிலின் அர்த்த மண்டபத்திற்கு முன் இரு துவாரபாலகர் சிலைகள் உள்ளன. கருவறையினைச் சுற்றியுள்ள தேவகோட்டத்தில் பிரம்மா, தட்சிணாமூர்த்தி, சுப்ரமணியர் கற் சிலைகள் சோழர் கால சிற்பத் திறனை விளக்கிக் கொண்டு உள்ளன.

இவ்வாறு ஒரே கோயிலினுள் அடுத்தடுத்து இரண்டு கோயில்கள் உள்ளடங்கி முழுவதும் கற்றளியால் கட்டப்பட்ட இக்கோயில்கள் முற்காலச் சோழர்களின் கலைப் பாணியை உலகுக்கு எடுத்துக் காட்டும் முகத்தான் கவின்மிகு அழகுடன் தோற்றமளிக்கின்றன.

## ஆலம்பாக்கம் (கைலாசநாதர் கோயில்)

லால்குடி வட்டத்தில், திருச்சியிலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ள ஆலம்பாக்கம் என்னும் ஊரிலிருந்து 1 கி.மீ. தொலைவில் திருமழபாடி சாலையில் அமைந்துள்ளது. பேருந்து வசதி மட்டும் உண்டு.

பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் கட்டப் பெற்று (கி.பி 8) பின்னர் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் (முதலாம் பராந்தகன்) மீண்டும் கட்டப் பெற்றுள்ளது. இக்கோயிலில் கிடைக்கும் மிகவும் பழைய கல்வெட்டான முதலாம் பராந்தகனின் 3-வது மற்றும் 5-வது ஆண்டுக் கல்வெட்டுக்களில் இக்கோயில் அமரேஸ்வரப் பெருமாள் என்றும் இவ்வூர் நந்திவர்மமங்கலம் என்றும் குறிக்கப்படுகின்றன.

இரண்டாம் இராஜராஜனின் ஆட்சிக் காலத்தில் இவ்வூரைச் சேர்ந்த சிவப் பிராமணர்கள் சிலர் இக்கோயிலின் கருவூலத்திலிருந்து சிறிது தொகையினைக் கடனாகப் பெற்று அத்தொகைக்குரிய வட்டித் தொகையினைக் கொண்டு இக்கோயிலுக்கு விளக்கெரிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

## செங்கமேடு

உடையார்பாளையம் வட்டம், கங்கை கொண்ட சோழபுரத்திற்குக் கிழக்கில் உள்ள கும்பகோணம்-சேத்தியாதோப்புக் குறுக்குச் சாலையில் இருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து ஜெயங்கொண்டம் வழியாகச் செல்ல பேருந்து வசதியும், புகைவண்டி வசதியும் உண்டு.

முதலாம் இராஜேந்திர சோழனின் படை கங்கை வரை சென்று வெற்றி கொண்டு கலிங்கநாடு வழியாகத் திரும்பும்போது வெற்றிச் சின்னமாகக் கலிங்கச் சிற்பங்களைக் கொண்டு வந்து கங்கை

கொண்ட சோழபுரத்தில் நிர்மாணித்தான். இக்கலிங்கச் சிற்பங்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனலாம்.

துர்க்கை, காளி, பைரவர், பைரவி போன்ற சிற்பங்கள் உள்ளன. பைரவர் சிலை ஒன்றில் கபால மாலை கால்வரை அணிந்தும், நிர்வாண நிலையில் நான்கு கைகளுடனும் அருகே நிர்வாண ஆண், பெண் உருவமும் இடுப்பில் கிண்கிணி மேகலையில் மணிகளுடன் காட்டப் பட்டுள்ளது. மற்றெரு சிலை பாதி மட்டுமே உள்ளது. மீதிப் பகுதி சிதைந்து உள்ளது.

பைரவர், பைரவி உருவங்கள் யோகீஸ்வர, யோகினி தெய்வங் களின் நிலையில் சமைக்கப்பட்டவையெனக் கருதலாம்.

## திருவெள்ளறை

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம்' திருச்சி-மண்ணச்சநல்லூர்-துறையூர் சாலையில் திருச்சியிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் இக்கிணறு உள்ளது.

திருச்சியிலிருந்து இவ்விடத்திற்குச் செல்ல பேருந்து வசதி மட்டும் உண்டு. திருச்சியிலிருந்து துறையூர் செல்லும் பேருந்தில் திருவெள்ளறை சென்று, அங்கிருந்து பின்னர் சுமார் ஒரு கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டும். சில நேரங்களில் நகரப் பேருந்து வசதி களும் உள்ளன. திருச்சியில் தங்க வாடகை விடுதிகள் உள்ளன.

ஸ்வஸ்திகா கிணறு, பல்லவ மன்னன் தந்திவர்மன் காலத்தில், அதாவது கி.பி. 800-ல் ஆலம்பாக்கத்து விசைய நல்லூழான் தம்பி கம்பன் அரையன் என்பவனால் தோண்டி அமைக்கப்பட்டது. இக் கிணறு "மார்ப்பிடுகு பெருங் கிணறு" என்றும் அழைக்கப்பட்டது.

இக்கிணற்றில், பாடல் கல்வெட்டொன்று இதே காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அப்பாடல்,

"ஸ்ரீ கண்டார் காணா உலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்த நாள்பார்த்து நின்று நையாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னை தளரச் செய்து நில்லா முன்
உண்டேல் லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினேய்"

என வாழ்வின் நிலையாமை குறித்து நிற்கின்றது.

## பெருங்குடி

இக்கோயில், திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், திருச்சி-சோமரசன்பேட்டை-வயலூர் சாலையில், திருச்சியிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவிலுள்ள சோமரசன்பேட்டையிலிருந்து கீழவயலூர் செல்லும் சாலையில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

திருச்சி-வயலூர்-திருச்சி-சோமரசன்பேட்டை வரை சென்று, பின்னர் கீழவயலூர் செல்லும் சாலையில் சுமார் 2 கி.மீ. நடந்து சென்று இக்கோயிலை அடையலாம். திருச்சியில் தங்குவதற்கு வாடகை விடுதிகள் உள்ளன.

அகஸ்தீஸ்வரர் கோயில் என இன்று அழைக்கப்பட்டு வரும் இக்கோயில், இரண்டாம் ஆதித்தன் காலத்தில் கட்டப்பெற்று, கல்வெட்டில், 'திருப்பெருங்குடி பரமேஸ்வரம்' என்று குறிக்கப் பட்டுள்ளது.

இக்கோயிலின் வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டில், ஆதித்தனின் மூன்றாவது ஆட்சியாண்டில் 'வீரபாண்டியனின் தலை கொண்ட பரகேசரிவர்மன்' என்னும் வரலாற்றுக் குறிப்பு காணப் படுகிறது.

முதலாம் இராசராசனின் முதல் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ் வூரில் உள்ளது.

பிரம்மா, அர்த்தநாரீஸ்வரர், தட்சிணாமூர்த்தி, சண்டேஸ்வரர் போன்ற கற்சிலைகள் முற்காலச் சோழர்களின் கலைப்பாணியை எடுத்துக் காட்டுவனவாக அழகுடன் மிளிர்கின்றன.

## பழூர் - சுந்தரேசுவரர் கோயில்

இக்கோயில், திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம் திருச்சி-ஜீயபுரம்-குளித்தலை சாலையில் திருச்சியிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் இருக்கிறது. பழூரில் இறங்கி பின்னர் சுமார் ஒரு கி.மீ. தொலைவு மண் பாதையில் நடந்து இரயில்வே கேட்டைத் தாண்டிச் செல்ல வேண்டும்.

திருச்சியிலிருந்து, ஜீயபுரம், குளித்தலை, முக்கொம்பு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்து மூலம் பழூர் செல்லலாம். திருச்சியில் தங்குவதற்கு வாடகை விடுதிகள் உள்ளன.

இக்கோயில், முற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்த கற்றளியாகும். தற்போது சுந்தரேஸ்வரர் கோயில் என அழைக்கப்படுகிறது. இவ்வூர் இறைவன் பெயர் கல்வெட்டில், 'நக்கன் பரமேஸ்வரர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. முதலாம் பராந்தகன் காலக் கல்வெட்டுக்களும் கொடும்பாளூர் குறுநிலமன்னன் இருக்குவேளிர் கல்வெட்டும், முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டும் பிற்காலப் பாண்டிய மன்னன் கோனேரின்மை கொண்டான் கல்வெட்டும் இக்கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

முதலாம் குலோத்துங்கனின் முப்பத்தொன்பதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில், பழுவூர் என்னும் இராசேந்திர சோழ நல்லூரையும் மற்றும் ஏனாதிமங்கலம் என்னும் கங்கவதி நல்லூரையும் இணைத்துப் பிரமதேயமாக நூற்றியெட்டுப் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கியுள்ள செய்தி குறிக்கப்படுகிறது.

துவாரபாலகர் சிலைகள், மற்றும் தேவகோஷ்டத்தில் வரும் பிரம்மா, விஷ்ணு கற்சிலைகள் ஆகியன முதலாம் பராந்தகனின் காலத்தைச் சார்ந்தவைகளாகும். இச்சிலைகள் கோயிலின் முன்புறம் பாதுகாப்புடன் எடுத்து வைக்கப்பட்டுள்ளன.

★

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமலிங்கவிலாசம்

இராமநாதபுரம் அரண்மனையின் மையமாகவும் பிரதான நுழைவாயிலுக்கு நேர் எதிராகவும் புல எண். 325/131-ல் 1425 சதுர மீட்டர் அளவினது இராமலிங்க விலாசம். அரண்மனைச் சாலையின் வெளியிலிருந்து நோக்கின் 50 மீட்டர் தொலைவில் மிகக் கம்பீர மாகத் தெரிவதைக் காணலாம்.

சென்னையிலிருந்து 542 கி.மீ. தொலைவிலும், மதுரையிலிருந்து 112 கி.மீ. தொலைவிலும், காரைக்குடியிலிருந்து 95 கி.மீ. தொலை விலும் அமையப்பெற்றுள்ளது. எல்லாத் தடங்களிலும் புகைவண்டி மற்றும் பேருந்து இணைப்புக்கள் உள்ளன. மையப் பேருந்து நிலையமும், புகைவண்டி நிலையமும் எதிர் எதிரே அமைந்துள்ளதால் ஏராளமான நகரப் பேருந்துகள் அரண்மனைக்கு உள்ளன. இதன் அருகாமையில் உள்ள விமானதளம் மதுரை ஆகும். ஏராள மான பல தரப்பட்ட உணவகங்களும், தனியார் தங்கும் விடுதிகளும் பயணியர் மாளிகையும் உள்ளன.

அய்யா என அழைக்கப்படும் கிழவன் சேதுபதி (1674-1710) தன் தலைநகரைப் போகலூரிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்று கையில் மண்சுவரால் கட்டப்பட்டிருந்த கோட்டையினைத் தரைமட்டமாக இடித்துவிட்டு, கீழக்கரைப் பெருவணிகரும் இராமநாதபுர சமஸ்தானத்தின் பிரதானியுமாக இருந்த சீதக்காதி யின் நிதியுதவி மற்றும் பொருள் உதவியுடன் இவ்வரண்மனையைப் பிரம்மாண்டமாக உருவாக்கினார்.

சேது மன்னர்களது ஆட்சிப்பீடமாகவும், கொலுமண்டபமாகவும் விளங்கிய இந்த அரண்மனையினை உயர்ந்த மதில்களாலும், வளைந்த விதானங்களாலும், வண்ண ஓவியங்களாலும் அழகுப் பேழையாக மாற்றியமைத்தவர்கள் விசயரகுநாத சேதுபதியும்

(1710—25), முத்துக்குமார விசயரகுநாத சேதுபதியும், (1730—35), சிவமுத்துக்குமார சேதுபதியும் (1734—47) ஆவார்கள்.

இவ்வெழில் மிக்க அரண்மனையின் உட்புறங்களில் எங்கு நோக்கினும் பச்சிலை வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றுள் தஞ்சை மன்னருக்கும், சேதுபதிக்கும் நடந்த போரைச் சித்தரிக்கும் ஓவியம், ஆடற்கலையை மன்னர் பல்வேறு உடையணிந்த நிலையில் காணுதல், சமயப் பெரியார்களோடு தொடர்புடைய ஓவியங்கள், இராமாயணம் மற்றும் பாகவதக்கதை சொல்லும் ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

வரலாற்று நினைவுகளைக் கூறும்வகையில், அடுத்தடுத்து விசயரங்க சொக்கநாத நாயக்கர்-சேதுபதியின் தெய்வீகத் தொடர்புகள், சேதுபதி மன்னருக்குப் பரங்கியர் (போர்த்துகீசியர்) அன்பளிப்புடன் காத்திருத்தல், அந்தப்புர கேளிக்கைகள், மராத்திய மன்னர்களது அறந்தாங்கிப் போர்க்காட்சிகள், மறவர் சீமைக்குள் புகுந்த மராத்தியரைக் கைது செய்தல், அரண்மனையில் உறங்கிவிட்ட தமிழ்ப்புலவருக்குக் களைப்பு தீர உபசரித்தல், மகளிரது எழில் விளையாட்டுகள், ஆட்டல் மகளிர், ஆரணங்குகளின் ஆடை அணிகலன்கள், படைவீரர்களது ஆயுதங்கள், உபயோகப்படுத்திய மதுபானக்கலன் வகைகள் ஆகியவை சித்திரிக்கப்பட்டுள்ளன.

1798-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரது அலுவலகமாக மாற்றப்பெற்ற இந்த இராமலிங்கவிலாசம்தான், ஜாக்ஸன் துரையைச் சந்திப்பதற்கு தானாபதி பிள்ளையும், வெள்ளையத்தேவனும் உடன்வரக் கட்டபொம்மனும், ஊமைத்துரையும் வந்ததாகக் கூறப்படும் இடம். அதுமட்டுமல்லாமல், கட்டபொம்மனின் இறுதி வாழ்க்கையின் இரண்டாவது போராட்டம் துவங்க அடிப்படையாக விளங்கிய சரித்திரப் புகழ்வாய்ந்த இடமுமாகும்.

திரு. இராமநாதசேதுபதி அவர்களின் அன்பளிப்பாக அரசுக்கு அளிக்கப்பெற்ற இந்த அரண்மனை 1978-ஆம் ஆண்டு முதல் தொல்பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பின் கீழ் இருந்து வருகிறது.

**சேதுபதிக்கோட்டை**

சொல் வழக்கில் கட்டபொம்மன்கோட்டை என இருந்துவரும் இச்சேதுபதிகோட்டை, கமுதியிலிருந்து மதுரை செல்லும் நெடுஞ் சாலையில் 2 கி.மீ. தொலைவில், சாலையின் தென்புறம் புல எண். 144/3ஐ சேர்ந்த 4.75 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

மதுரையிலிருந்து 88 கி.மீ. தொலைவிலும், இராமநாதபுரத் திலிருந்து 88 கி.மீ. தொலைவிலும் அமையப்பெற்றுள்ள இவ் விடத்தினை அடைவதற்குப் பல வழிகளிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. 35 கி.மீ. தொலைவில் உள்ள மானாமதுரை சந்திப்பு அருகாமையில் உள்ள புகைவண்டி நிலையமாகும்.

கமுதியில் ஏராளமாக உணவகங்கள் இருப்பினும் மிகக் குறைந்த வசதியுள்ள தங்கும் விடுதிகளே உள்ளன.

சுமார் 275 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த கோட்டை குண்டாறு நதிக்கரையின் மேட்டுப் பகுதியில் இராமநாதபுரத்தினை ஆண்ட உடையத்தேவர் என்ற விசயரகுநாத சேதுபதியால் (காலம் 1711-1725) பிரெஞ்சு நாட்டுப் பொறியியல் வல்லுநர் உதவியுடன் கட்டப்பட்டதாகும்.

கோட்டை, அளவில் சிறியதாயினும் இரண்டடுக்குக்கோட்டை யினைப் போன்று கட்டப்பட்டு, அகழிகள் எதுவும் இல்லாமல் கொத்தளங்களுடன், நல்ல குடிநீர் வசதி உட்புறக் கோட்டைக்குள் கிடைக்கும் வகையில் அமையப்பெற்றிருந்தது. வெளியிலிருந்து இக் கோட்டை தெரியாத அளவிற்கு இக்கோட்டையினைச் சுற்றி முள்ளரண் உருவாக்கப்பட்டுள்ளது.

1801-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25-ஆம் நாள் பாஞ்சாலங் குறிச்சி வீழ்ச்சிக்குப்பின் கிழக்கிந்திய கம்பெனி இராமநாதபுரத் திற்குச் சொந்தமான இக்கோட்டையைத் தன் வசப்படுத்தி லெப்டினன்ட் கார்டை இதன் பொறுப்பாளராக அமர்த்தியது. 21—7—1801 இல் மறுபடியும் இக்கோட்டையினை வெள்ளை

மருது தலைமையிலான சிவகங்கைப் படை கைப்பற்றியது. ஆனால் விரைவில் கிழக்கிந்தியக் கம்பெனி மீண்டும் இதனைக் கைப்பற்றி அதன் ஒரு பகுதியினை இடித்துத் தரைமட்டமாக்கி உபயோகமற்ற தாகச் செய்தது.

கட்டபொம்மன், இராமநாதபுரத்திற்கு ஜாக்சன் துரையைச் சந்திக்க செல்லுகையில் ஒரு நாள் இக்கோட்டையில் தங்கி சென்ற தாக வழிவழியாகக் கூறுவதால், இதனை மக்கள் இன்றும் கட்டபொம்மன் கோட்டை என்று வழக்கில் கூறிவருகின்றனர்.

இக்கோட்டை வட்டமாக அமைந்துள்ளது. ஒன்பது கொத் தளங்களைக் கொண்டு விளங்குகிறது. மதில் சுவர் 25.5 அடி உயர முடையதாக உள்ளது. கோட்டையின் உட்புறம் 292 அடி விட்ட முடையதாக உருவாக்கப்பட்டுக் காட்சியளிக்கிறது. கோட்டையின் நுழைவாயில் வடபகுதியில் அமைந்துள்ளது.

★

# வ. உ. சிதம்பரனார் மாவட்டம்

## கும்பினியார் கல்லறைகள்

ஒட்டப்பிடாரத்தின் வடகிழக்குத் திசையில் 0.75 கி.மீ. தொலைவில் உள்ள புல எண். 736 - ஐச் சேர்ந்த (9.085 ஹெக்டேர் பரப்பளவை உடைய) கிராமப் புறம்போக்கு நிலத்தில் அமையப் பெற்றுள்ளது.

ஊரிலிருந்து வடக்காகச் செல்லும் பாஞ்சாலங்குறிச்சி தார் சாலையில் 0.50 கி.மீ. சென்று பின்பு கிழக்கு நோக்கிச் செல்லும் வடிகால் வாய்க்கால் வழியாக 0.20 கி.மீ. தூரம் சென்றால் இவ்விடத்தினை அடையலாம்.

மதுரையிலிருந்து 125 கி.மீ. தொலைவிலும், திருநெல்வேலியிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும் அமையப் பெற்றுள்ள ஒட்டப்பிடாரத்தினை அடைவதற்குப் பல ஊர்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. குறிப்பாக 24 .கி.மீ தொலைவில் அமையப் பெற்றுள்ள தூத்துக்குடியிலிருந்து ஏராளமான அரசுப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் உள்ளன. 10 கி.மீ. தொலைவில் அமையப் பெற்றுள்ள மணியாச்சியே இதன் அருகாமையில் உள்ள புகைவண்டி நிலையமாகும்.

இவ்வூரில் ஏராளமான உணவகங்கள் இருப்பினும் ஓய்வகங்களுக்கு 3 கி.மீ. தொலைவில் உள்ள பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு அருகாமையில் உள்ள சுற்றுலா விடுதிக்குச் செல்லுதல் வேண்டும்.

வீரபாண்டிய கட்டபொம்மனுடன் 1799-ஆம் ஆண்டு நடைபெற்ற பாஞ்சாலங்குறிச்சி யுத்தத்தின்போது இறந்து விட்ட கும்பினி படையினரின் லெப்டினென்டுகளான டக்ளஸ், டார்மியக்ஸ், கொல்லின்ஸ், பிளேக், கன்னர்பின்ஸி ஆகிய ஐவரது உடல்களையும் நல்லடக்கம் செய்யப்பட்ட இடமாகும்.

## ஆங்கிலேயர் காலக் கல்லறை

பாஞ்சாலங்குறிச்சியின் வடமேற்கே 3 கி.மீ. தூரத்தில் அமையப்பெற்றுள்ள இக்கல்லறை புல எண். 3328-ல் 0.51 ஏக்கர் நிலப்பரப்பினை உடையதாக அமையப்பெற்றுள்ளது.

தூத்துக்குடியிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும், திருநெல்வேலியி லிருந்து 54 கி.மீ. தொலைவிலும், மதுரையிலிருந்து 155 கி.மீ. தொலைவிலும் அமையப்பெற்றுள்ள ஒட்டப்பிடாரத்திற்கு ஏராள மான பேருந்துகள் தூத்துக்குடியிலிருந்து உள்ளன. ஒடடப்பிடாரத் திலிருந்து 1 கி.மீ. தொலைவு பாஞ்சாலங்குறிச்சி கோட்டைச்சாலை யில் சென்று பின் மேற்கு நோக்கிச் செல்லும் கப்பி சாலையில் 1 கி.மீ. தொலைவு சென்ற பின்பு இச்சின்னத்திற்காகச் செல்லும் சாலையில் 1 கி.மீ. தொலைவு செல்ல வேண்டும். ஒட்டப்பிடாரத்திலிருந்து நடைமுலமாகவோ, சைக்கிளிலோ சென்றால் எளிதாக இவ்விடத்தை அடையலாம். ஒட்டப்பிடாரத்திலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள மணியாச்சியே இதன் அருகாமையில் உள்ள புகைவண்டி நிலைய மாகும். ஏராளமான உணவகங்கள் ஒட்டப்பிடாரத்தில் இருந்தும் தங்குவதற்குப் பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு அருகாமையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வாரிய அலுவலகத்துக்குத் தான் செல்லுதல் வேண்டும்.

கி.பி. 1801-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் தேதியில் ஊமைத்துரைக்கும் கும்பினியாருக்கும் நடைபெற்ற போரில் இறந்து பட்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நினைவுக் கல்லறையாகும். இக் கல்லறையில் அவ்வீரர்கள் தொடர்பான செய்தியினைத் தாங்கிய கல்வெட்டுக்கள் உள்ளன.

## கட்டபொம்மன் கோட்டை

வரலாற்றுச் சிறப்புமிக்க பாஞ்சாலங்குறிச்சி கிராமத்தின் மையப்பகுதியில், கட்டபொம்மன் எனவும் வீரபாண்டிய கட்டபொம்மன் எனவும் அழைக்கப்படும் மாவீரனின் கோட்டை அமைந்திருந்தது. இக்கோட்டையின் தளப்பகுதி அகழ்வாய்வு மூலம் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் வெளிக் கொணரப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மதுரையிலிருந்து 155 கி.மீ. தொலைவிலும், கன்னியாகுமரியிலிருந்து 153 கி.மீ. தொலைவிலும், திருநெல்வேலியிலிருந்து 54 கி.மீ. தொலைவிலும், தூத்துக்குடியிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும் அமையப்பெற்றுள்ளது. ஒட்டப்பிடாரம் வரை அதிக அளவில் பேருந்து வசதி உள்ளது. ஒட்டப்பிடாரத்திலிருந்து 3 கி.மீ. தூரம் வரை உள்ள இக்கோட்டைக்கு மிகக் குறைந்த அளவிலேயே பேருந்து வசதி உள்ளது. 16 கி.மீ. தொலைவில் அமையப்பெற்றுள்ள மணியாச்சி புகைவண்டி நிலையம் இதன் அருகாமையில் உள்ள புகைவண்டி நிலையமாகும். 155 கி.மீ. தொலைவில் உள்ள மதுரையே இதன் அருகாமையில் உள்ள விமானத்தளம் ஆகும்.

இக்கோட்டைக்கு அருகாமையிலேயே சுற்றுலாத்துறையினரது விடுதிகள் வாடகைக்கு விடப்படுகின்றன. அருகாமையிலேயே சிற்றுண்டிச் சாலையும் உள்ளது.

பாஞ்சாலங்குறிச்சியைக் 'கட்டபொம்மன்' என்ற சிறப்பு பெயரோடு ஜமீன்தார்கள் ஆளுகை புரிந்தனர். எல்லோராலும் மாவீரன் என போற்றப்படும் வீரபாண்டிய கட்டபொம்மன் என்பவன் பாஞ்சாலங்குறிச்சியில் நான்காவதாக ஆட்சிப்பீடம் ஏறியவனாவான். இவனுக்கு முன்பு ஆட்சி செய்த மூன்றாம் கட்டபொம்மனின் காலத்திலும் பாஞ்சாலங்குறிச்சி தாக்கப் பட்டுள்ளது.

மூன்றாம் கட்டபொம்மன் ஆட்சி காலத்தில் 'கர்னல் புல்லர்டன்' தலைமையில் 1786-இல் நடந்த கும்பினியர்களது சண்டையில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தகர்க்கப்பட்டது. கி.பி. 1780-க்கும் 1785-க்கும் இடைப்பட்ட காலத்தில் பாளையங்களில் வரி வசூலிக்கும் பொறுப்பு நவாப்பின் கைக்கு வந்தது. பாளையங்கள் இந் நேரத்தில் மீண்டும் தலை தூக்கும் பொழுது மூன்றாம் கட்டபொம்மன் இறந்து விடவே நான்காம் கட்டபொம்மனாகிய வீரபாண்டிய கட்டபொம்மன் அரியணை ஏறினான். இவன் காலத்தில் இடிந்த கோட்டை மீண்டும் வலுவாக எழுப்பப்பட்டது.

ஆங்கிலேயர் நான்காம் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பல வழிகளில் அவமானப்படுத்தினர். இதனால் ஆங்கிலேயரை வெகு தீவிரமாக கட்டபொம்மன் எதிர்க்கவே 1899-ல் மேஜர் பானர்மேன் தலைமையில் நடந்த படையெடுப்பில் 'டிராபால்கர்' என அழைக்கப் படும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தகர்க்கப்பட்டது.

பாளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஊமைத்துரை, சிவத்தையா ஆகியோரைப் பாஞ்சாலங்குறிச்சி மக்கள் சிறைச்சாலை யைத் தகர்த்து' ஆங்கிலேயர்களுடன் சிலம்புப் போர் நிகழ்த்தி விடுவித்தனர். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தரைமட்டமாக இருப்பதைக் கண்ட ஊமைத்துரை, தடைச்சட்டத்தை மீறி, மண்ணை பனஞ்சாற்றில் குழைத்து, அதில் கம்பஞ் சக்கையைச் சேர்த்து படைபடையாக வைத்து உறுதிபெற ஆறே நாட்களில் புதிய கோட்டைய்யை எழுப்பியதாகக் கூறப்படுகிறது.

இதனை அறிந்த 'மெக்காலே' தலைமையிலான படை இரு முறை படையெடுத்ததில், இரண்டாம் படையெடுப்பில் மீண்டும் இக்கோட்டைத் தகர்க்கப்பட்டது.

# செங்கல்பட்டு மாவட்டம்

## ஆலம்பறை கோட்டை

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் ஆலம்பறை என்ற ஊர் உள்ளது. மதுராந்தகம்-கடப்பாக்கம் சாலையில் மதுராந்தகத்தில் இருந்து 20 கி.மீ. தொலைவில் இந்த ஊர் உள்ளது. இங்குள்ள கோட்டை ஆலம்பறைக் கோட்டை என்று அழைக்கப்படுகிறது. இது கடப்பாக்கம் என்னும் ஊரிலிருந்து கிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் கடற்கரையில் அமைந்துள்ளது. இக்கோட்டை 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முகலாய அரசரால் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. கி.பி. 1735-இல் இது நவாப் தோஸ்து அலிகானின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பிரெஞ்சு தளபதியான புகழ்பெற்ற டூப்ளே தனக்களித்த உதவியைப் பாராட்டி இக்கோட்டையைத் தக்காணச் சுபேதார் முஸாபர்ஜங், பிரெஞ்சுக்காரருக்கு 1750-இல் அன்பளிப் பாகக் கொடுத்துள்ளார். பிரெஞ்சு ஆட்சியின் வலிமை தளர்ந்த போது ஆங்கில தளபதி கி.பி. 1760-இல் இக்கோட்டையைக் கைப்பற்றி இதைத் தகர்த்திருக்கிறார். தற்போது கோட்டையின் சிறு பகுதி மட்டுமே காணப்படுகிறது.

## இடையார்பாக்கம்

சென்னையிலிருந்து 50 கி.மீ. தொலைவில் இடையார்பாக்கம் அமைந்துள்ளது. சென்னை காஞ்சிபுரம் சாலையில் உள்ள சுங்குவார்ச்சத்திரத்திலிருந்து திருவள்ளூர் செல்லும் சாலையில் 20 கி.மீ. தொலைவில் காணப்படுகிறது. திருவள்ளூரில் தங்கும் விடுதி, உணவகங்கள் உள்ளன.

இடையார்பாக்கம் ஊரின் மேற்கே ஏரிக்கரையில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. தொண்டை மண்டலத்திற்கே சிறப்பான தொரு கட்டட அமைப்பான தூங்கானை மாட வடிவத்துடன் இக் கோயில் அழகுடன் விளங்குகிறது. கருவறையுடன் அர்த்த

மண்டபமும் சேர்ந்து காணப்படுகிறது. விமானம் இரு தள அமைப்புடன் கட்டப்பெற்றுள்ளது. கருவறைக்கு மேலே விமானப்பகுதி மட்டும் செங்கற்களால் எடுப்பிக்கப்பட்டுள்ளது. கருவறையின் மாடங்களில் (தேவகோட்டங்களில்) பிள்ளையார், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, பிரம்மா, ஆகிய தெய்வத் திருவுருவங்கள் சோழர் காலக் கலைப் பாணியில் பொலிவுடன் காட்சி தருகின்றன.

இக்கோயிலில் முதற் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுக்களும், இரண்டாம் இராஜராஜன் கல்வெட்டு ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் முதற் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கல்வெட்டுக்களாலும் கோயிற் கட்டடக் கலையின் அமைதி கொண்டும் அறிய முடிகிறது மேலும் இக்கோயில் சந்திரசேகரன் ரவி என்ற சோழேந்திர சிம்ம ஆசாரி என்ற சிற்பியினால் கட்டப்பட்டது என்ற செய்தி கல்வெட்டின் மூலம் புலனாகிறது. இறைவன் 'திருப்பாத காடுடையார்' என அழைக்கப் பெறுகிறார். இவ்வூர் 'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் மணவிற் கோட்டத்துப் புரிசை நாட்டின்' ஒரு பகுதியாக இருந்தது. புரிசை என்ற ஊர் இன்றும் இவ்வூருக்கு அருகில் உள்ளது. இவ்வூர் 'இடையாற்றுப்பாக்கம்' எனவும் 'ராஜ வித்யாதர சதுர்வேதி மங்கலம்' எனவும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இவ்வூரில் உள்ள வைகுண்டபெருமாள் கோயிலுக்குச் செல்லும் வழியில் வாய்க்கால் கரையில் சிறிதளவுச் சிதைந்த நிலையில் உள்ள ஒன்பது கற்சிற்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவையாவன: சிவலிங்கம், நந்தி, விஷ்ணு, துர்க்கை, பிரம்மா, பைரவர், தட்சிணாமூர்த்தி, அம்மன், சூரியன், இவை அனைத்தும் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இங்கு ஒரு கோயில் இருந்து அழிந்திருக்கலாம். இந்த இடத்தைச் 'சிவன் கோயில் மேடு' என இவ்வூர் மக்கள் அழைக்கின்றனர்.

**கருங்குழிக் கோட்டை**

மதுராந்தகம் வட்டத்தில் உள்ள சிறிய ஊர். சென்னை-விழுப்புரம் சாலையில் சென்னையிலிருந்து 80 கி.மீ. தொலைவில் மதுராந்தகத்துக்கு அருகில் அமைந்துள்ள இவ்வூருக்குப் பேருந்தின்

மூலமும் புகைவண்டி மூலமும் செல்லலாம். செங்கற்பட்டிலோ அல்லது மதுராந்தகத்திலோ, தங்கும் வசதி, உணவக வசதிகளைப் பெறலாம்.

கருங்குழியின் தென்மேற்கே கருங்கல்லாலான கோட்டைச் சுவர்கள் உள்ளன. இது கருங்குழிக்கோட்டை என்று அறியப் படுகிறது. இக்கோட்டைக்குத் தெற்கே கிளியாறு ஓடுகிறது. இந்த ஆறும் கோட்டைக்கு ஒரு அரணாக இயற்கையாக அமைந்துள்ளது. இக்கோட்டையை முகமதியர் சுமார் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டியிருக்கலாம் என்றும், சிறு ஜமீன்களிடமிருந்து வரியாகவ சூலிக் கப்பெற்ற தானியங்களைச் சேமித்துவைக்க இக்கோட்டை பயன் பெற்றிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

கி.பி. 1750-இல் பிரெஞ்சுக்காரர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது என்று குறிப்புகள் மூலம் புலனாகிறது. கி.பி. 1759-இல் சர். அயர்கூட் என்னும் பிரிட்டிஷ் தளபதி வந்தவாசி கோட்டையை முற்றுகை யிட்டு வென்றபின் கருங்குழிக் கோட்டையையும் கைப்பற்றிக்கொண் டதாகத் தெரிகிறது. கி.பி. 1780-இல் நடைபெற்ற ஹைதர்அலியின் படையெடுப்பில் கருங்குழிக்கோட்டை ஹைதர்அலி வசம் ஆயிற்று. பிறகு கி.பி. 1781-இல் சர் அயர்கூட், தளபதி டேவிஸ்ஸுடன் ஆயிரம் போர் வீரர்கள் அடங்கிய பெரும்படையையனுப்பி இக்கோட்டையை மீண்டும் ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டனர்.

இக்கோட்டையைப்பற்றி 'ஆர்மி' என்பவர் எழுதியக் குறிப் பில் கீழ்வருமாறு காணப்படுகிறது. 'இக்கோட்டையின் நான்கு புறங் களும் பெரும் மதில்களால் சூழப்பட்டு அதன் சுற்றளவு 1500 மீட்டர் உடையதாகக் காணப்படுகிறது. இது கருங்கற்களால் கட்டப் பட்டுள்ளது. இரண்டு மூலைகளில் இரு கொத்தளங்கள் அமைக்கப் பட்டுள்ளன'. கோட்டையின் தளபதி ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த கர்னல் ஓர்நல்லி என்பவராவார்.

இக்கோட்டை கி.பி. 1782-இல் சென்னை கவர்னர் 'லாட் மக்காட்னி அவர்களது ஆணையின் பேரில் இடித்துத் தள்ளப் பெற்றது.

### சிவபுரம்

செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் சென்னை-அரக்கோணம் சாலையில் பேரம்பாக்கத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பழமையான ஊர் சிவபுரம். தங்கும் வசதி மற்றும் உணவகங்கள் அரக்கோணத்திலும் திருவள்ளூரிலும் உள்ளன.

பழங்காலத்தில் இவ்வூர் "ஊற்றுக்காட்டுக்கோட்டத்து நீர் வேளூர் நாட்டு உரோகடம்" என அழைக்கப்பட்டது. முதலாம் இராசாதிராசனின் 27-ஆம் ஆட்சியாண்டில் இவ்வூர் 'சிவபுரம்' எனப் பெயர் மாற்றி அழைக்கப்பட்டது. முதல் உரோகடம் மறைந்து 'சிவபுரம்' என்ற பெயர் நிலைத்துவிட்டது.

முழுவதும் கருங்கல்லால் ஆன இவ்வூர்க் கோயிலை "ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மகாதேவர் கோயில்" எனக் கல்வெட்டுகள் கூறு கின்றன. ஒரு தள விமானமுடைய உண்ணாழிகை, இடைகழி, முன்மண்டபம், முகமண்டபம் ஆகிய அனைத்துப் பகுதிகளையும் நிறைவாக உடைய இக்கோயிலின் மாடங்களைக் (கோட்டங்களை) இராசராசன் காலக் கலைப்பாணியில் அமைந்த பிள்ளையார், ஆலமர்ச் செல்வன், அண்ணாமலையார், துர்க்கை சிலைகள் அழகு செய்கின்றன. நுழைவாயிலிலுள்ள வாயிற் காவலர் சிலைகள் இராசராசன் கலைப்பாணியை வலியுறுத்திக் காட்டுகின்றன.

முதலாம் இராசேந்திரனின் 8-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே இக்கோயிலின் பழமையான கல்வெட்டாகும். இவனது 26-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் இவ்வூர் கோயிலின் பல்வேறு பணிகள் தடையின்றி நடைபெற நீர்வேளூர் நாட்டு ஊரார் சபையாரிடை பொன்னைத் தந்து அதன் வட்டியைப் பெற வகை செய்யப்பட் டிருந்ததைக் குறிப்பிடுகின்றன. இராசாதிராசனுடைய 27-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலில் பணிசெய்த பல்வேறு அலுவலர்களைக் குறிப்பிடுகின்றது.

### பிள்ளைச்சத்திரம்-செல்வழிமங்கலம்

சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் சுங்குவார் சத்திரத்திற்கு அருகில் சென்னையிலிருந்து 55 கி.மீ. தொலைவில்

சேர்க்கை எண்

பேருந்தில் சென்றால் செல்வழிமங்கலம் என்ற சிற்றூரை அடைய லாம். அவ்வூரில் சாலையோரத்தில் இச்சத்திரம் உள்ளது. காஞ்சி புரத்தில் தங்கும் வசதியும் உணவகமும் உள்ளன.

இச்சத்திரம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்க லாம். இவ்வழியே செல்லும் வழிப்போக்கர்களும், படையினரும் இங்கு தங்கி களைப்பாறுவதற்கு இச்சத்திரம் பயன்பட்டிருக்க வேண்டும். இது முற்றிலும் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. 37 மீ. நீளமும் 26 மீ. அகலமும் உடையது. சத்திரத்தின் நடுவில் திறந்த முற்றம் காணப்படுகிறது.

## சிவன்கூடல் - சிவன்கோயில்

செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் சென்னை-வேலூர் நெடுஞ்சாலையில் பிள்ளைச்சத்திரத்திற்கு அருகில் வடக்கு நோக்கிச் சாலையில் இருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் சிவன்கூடல். காஞ்சிபுரத்தில் தங்கும் வசதியும், உணவக வசதியும் உண்டு.

இவ்வூரைச் சிவன் கூடல் என்றும், இவ்வூர் இறைவனை 'சிவக் கொழுந்தாண்டார்' 'சிவக்கொழுந்தீசுவரர்' என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. முதலாம் இராசேந்திரனின் மூன்றாவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டே இங்குள்ள கல்வெட்டுகளில் பழமையானதா கையால் இது முதலாம் இராசேந்திரன் காலத்துக் கோயிலாக இருக்கலாம். முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன் கல்வெட்டு களில் நிலக்கொடை மற்றும் நில விற்பனை பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. விக்கிரமசோழன் காலத்தில் விமானம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. 13-ஆம் நூற்றாண்டில் மரகதவல்லி நாச்சியார் என்ற அம்மன் கோயில் கட்டப்பட்டுள்ளது. இதற்கு விஜயகண்டகோபாலன் கொடையளித்துள்ளான்.

## தாங்கி (வழிப்போக்கர் மண்டபம்)

சென்னையிலிருந்து வாலாஜாபேட்டை வழியாகக் காஞ்சிபுரம் செல்லும் சாலையில் சென்னையிலிருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ள தாங்கி என்ற ஊரைப் பேருந்து மூலம் அடையலாம். காஞ்சிபுரத்தில் தங்கும் வசதி, உணவகம் உள்ளன.

இவ்வூரில் சாலையோரத்தில் கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. இது வழிப்போக்கர் மண்டபம் என்று அழைக்கப் படுகிறது.

இரண்டு பகுதிகளாகக் காணப்படும் இம்மண்டபத்தின் பின்புறச் சுவரின் நடுவில் அனுமன் உருவமும், சுவரின் மேற்பகுதியில் விதானத் தையொட்டி கஜலட்சுமி உருவமும் உள்ளன. உட்புற மண்டபத்தின் விதானத்தின் நடுப்பகுதியில் நன்கு செதுக்கப்பட்டுள்ள கிளிகள் மலரைக் கொத்துவது போன்று புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. மண்டபத்தைத் தாங்கும் தூண்களில் திருமாலின் அவதாரங்களும் சிவபெருமானின் பல்வேறு மூர்த்திகளும் செதுக்கப் பட்டுள்ளன.

உட்புற மண்டபத்தின் மேற்குச் சுவரில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு இந்த வழிப் போக்கர் மண்டபம் கி.பி. 1777-இல் தித்தர் செட்டி, மூக்கர் செட்டி என்பவர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**விட்டலாபுரம்**

சென்னை-புதுப்பட்டிணம் சாலையில், விட்டலாபுரம் சென்னை யிலிருந்து சுமார் 75 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருக்கழுக் குன்றத்தில் தங்கும் வசதியும் உணவகங்களும் உண்டு.

திருமாலின் அவதாரங்களில் கிருஷ்ண அவதாரமும் ஒன்று. கிருஷ்ணனின் மற்றொரு வடிவம் விட்டலர் என அழைக்கபபடுகிறது. விட்டலருக்காக எடுக்கப்பட்ட தனிக் கோயில் தமிழகத்தில் இது ஒன்றே ஆகும். விஜயநகர மன்னர்களின் குலதெய்வமாக விட்டலர் கருதப்படுகிறார். கர்நாடக மாநிலத்தின் விஜயநகர மன்னர்களின் தலைநகரான ஹம்பியில் விட்டலருக்காகத் தனிக்கோயில் உள்ளது. ஸ்ரீரங்கத்துக் கோயிலில் விட்டலருக்காகத் தனிச் சந்நிதி உள்ளது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டு, இக்கோயிலையும் 'விட்டலா புரம்' என அழைக்கிறது. இவ்வூரும் கோயிலும் கிருஷ்ணதேவராய ரால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது எனக் குறிப் பிடுகிறது. ஹம்பியில் உள்ளது போன்றே இக்கோயிலின் கட்டட்

அமைப்பும் காணப்படுகிறது. விட்டலரின் திருமேனியை நின்ற கோலத்தில் இடது கையில் சங்கு ஏந்தியும், வலது கையில் அபய முத்திரை தாங்கியும் காண்கிறோம். இக்கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு மாவலிபுரத்தைச் சேர்ந்த லட்சுமிநாதன் என்பவர் அளித்த தானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மாவலிபுரம் என்பது மாமல்லபுரத்தைக் குறிப்பதாகும்.

★

# வடார்க்காடு மாவட்டம்

## ஆர்மாமலை

வடார்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் ஆம்பூரிலிருந்து ஏறத்தாழ 25 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் மலையாம்பட்டு. மலையாம்பட்டிலிருந்து 1.5 கி.மீ. தொலைவில் ஆர்மாமலை அமைந்துள்ளது. ஆர்மாமலையைக் காணச் செல்வோருக்கு ஆம்பூரில் தங்கும் வசதிகளும், உணவு விடுதிகளும் உள்ளன. ஆம்பூர் நகருக்கு இருப்புப் பாதை வசதியும் தேசிய நெடுஞ்சாலை வசதியும் உள்ளன. மலையின் இடைப்பகுதியில் இயற்கையாய் அமைந்த முழையில் (குகை) சமணர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களது வருகைக்கு முன்னரே மக்கள் வாழ்ந்த தடயங்களும் உள்ளன.

முழையில் (குகையில்) வாழ்ந்த சமணப் பெரியார்கள் தங்கவும் வழிபடவும் மண்ணாலான கட்டடங்களைக் கட்டியிருக்கின்றனர். அச்சுவர்கள் மீது ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. எனினும் காலத்தால் அழிவுற்றுத் தெளிவற்றுள்ளன.

இங்கு சில கற்சிலைகள் கிடைத்துள்ளன. அவற்றுள் இரு வாயிற் காவலர் சிலைகளும், தாமரை வடிவ தாங்கு (பீடம்) கல்லும் குறிப்பிடத்தக்கன. தாங்கு கல்லில் எட்டாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களில் "கடைக்கோட்டு ருத்தநந்தி படாரர் மாணாக்கர்" என எழுதப்பட்டுள்ளது. கடைக்கோடு என்பது இம்மலை போலும்.

இக்காலத்தில் தீட்டப்பட்ட சமண ஓவியங்கள் சிறப்பு வாய்ந்தவை. சுவரோவியங்கள் மறைந்தாலும் விதான ஓவியங்கள் நல்ல நிலையில் உள்ளன. விதானத்தில் சாந்து பூசி இயற்கை வண்ணங்களைக் கொண்டு கொடிகளும் இலைகளும் நிரம்பிய நிலத்தினை ஒரு பகுதியிலும்; சிறகடித்துப் பறக்கும் அன்னங்களை ஒரு பகுதியிலும் தீட்டியுள்ளனர். இவையன்றி எண் சதுரம் வரைந்து நடுவில் ஒரு சதுரம் அமைத்துத் தீட்டப்பட்ட ஓவியம் தனிச் சிறப்பு

வாய்ந்தது. இரண்டு சதுரங்களில் உள்ள ஓவியங்கள் மட்டும் எஞ்சியுள்ளன. ஒன்றில் எண்டிசைக் காவலர்களும் மற்றொன்றில் சமண சமயத்தோடு தொடர்புடைய தாமரைத் தடாகமும் தீட்டப்பட்டுள்ளன.

சித்தன்னவாசல் ஓவியங்களை ஒத்த இவ்வோவியங்கள் பல்லவர்களின் இறுதிக் காலமாகிய எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் தீட்டப்பட்டனவாகும்.

## சின்னையன்பேட்டை

வடார்க்காடு மாவட்டம் செங்கம் வட்டத்தில் அமைந்துள்ள ஊர் சின்னையன்பேட்டை. திருவண்ணாமலையிலிருந்து அரூர் செல்லும் சாலையில் சுமார் 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர். திருவண்ணாமலையில் தங்கும் வசதியும் உணவகங்களும் உள்ளன.

நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் 16, 17-ஆம் நூற்றாண்டில் சின்னம நாயக்கர் என்பவரால் தன் மகளின் நலனுக்காக ஒரு குளம் வெட்டப்பட்டது. அது இன்றளவும் சின்னம நாயக்கன் பேரால் சின்னம நாயக்கன் குளம் என்றே அழைக்கப்படுகிறது.

இக்குளம் ஏறத்தாழ 120 சதுர அடி பரப்பில் நாற்புறமும் படிக்கட்டுகளுடன் அமைக்கப்பட்டு மதிள் சுவர்களுடன் காணப்படுகிறது.

குளத்தில் பல்வகைச் சிற்பங்கள் பாங்குடன் செதுக்கப்பட்டுள்ளன. பறப்பனவும், ஊர்வனவுமாய பல்வகை உயிர்களும், இரட்டைப்புள் (மிதுனம்), பெண்டிர் விளையாட்டுக்கள், மற்போர், பன்றி வேட்டை போன்ற உயிரினங்களின் வாழ்வியற் காட்சிகளோடு அகவுணர்வைத் தூண்டும் பாலுணர்வுக் காட்சிகளும் செதுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பாலுணர்வைத் தூண்டும் பல்வேறு காட்சிகள் நாயக்கர் காலத்தில் நிரம்பப் படைக்கப்பட்டுள்ளன.

அக்காலத் தேர்ச் சிற்பங்களிலும் இத்தகைய காட்சிகள் இடம் பெற்றுள்ளவை கண்கூடு.

இச்சிற்பங்களைத் தன் மகளின் உணர்வுகளைத் தூண்ட சின்னம நாயக்கன் செதுக்குவித்தான் எனச் செவிவழிச் செய்தி வழங்கினும் நாயக்கர் காலச் சிற்பக் கலைக்கு இஃது ஒரு நல்ல எடுத்துக்காட்டு எனலாம்.

## பூண்டி – அருகன் கோயில்

வடார்க்காடு மாவட்டம் ஆரணி வட்டத்தில் அமைந்துள்ள ஊர் பூண்டி. இது ஆரணி, ஆர்க்காட்டுச் சாலையில் ஆரணியில் இருந்து மூன்று கி.மீ. தொலைவில் உள்ளது. ஆரணியில் தங்கும் வசதியும் உணவகங்களும் உள்ளன.

'பொன்னெழில் நாதர் கோயில்' என வழங்கப்படும் இவ்வூரில் உள்ள அருகன் கோயில் சோழர் காலக் கட்டடக் கலையில் அமைந்துள்ளது. சமயம் வேறாயினும் தென்னகக் கட்டடக் கலையின் மரபு மாறாமல் கட்டப்பட்டுள்ளது. அடிப்பகுதி கல்லாலும் மேற்பகுதி சுதையாலும் ஆன இக்கோயில் விமானத்திற்குப் பல்வேறு சமணச் சுதை உருவங்கள் எழில் ஊட்டுகின்றன.

சம்புவராயனின் பாடல் கல்வெட்டு இக்கோயிலை 'வீரவீர ஜினாலயம்' எனக் குறிப்பிடுகின்றது. நாட்டுப் பிரிவு முதல், எல்லை கூறி, கல் நடுதல் வரை முழுமையும் பாடலால் அமைந்த கல்வெட்டு இது.

இக்கோயிலில் மகாவீரர் முதலான கற்சிற்பங்களும், இருபதுக்கு மேற்பட்ட சமணச் செப்புத் திருமேனிகளும் இக்கோயிலின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

## பெருங்காஞ்சி

வடார்க்காடு மாவட்டம், வாலாசாப்பேட்டையில் இருந்து சோளிங்கர் செல்லும் வழியில் சுமார் பத்து கி.மீ. தொலைவில்

இவ்வூர் அமைந்துள்ளது. பேருந்து வழியாக இவ்விடத்திற்குச் செல்வோர் தங்குவதற்கு வசதியாக உள்ள இடம் வாலாசாப் பேட்டை அல்லது சோளிங்கர் ஆகும். புகைவண்டி மூலம் செல்வோர் வாலாசாப்பேட்டையில் இறங்கிச் செல்லுதல் வேண்டும்.

இவ்வூரின் வடகிழக்குப் பகுதியில் சுமார் 200 அடி தொலைவில் தாய்மார் எழுவர் சிலைகள் ( சப்தமாதர் ) அமைந்துள்ளன இச்சிலைகள் அனைத்தும் பல்லவர் காலத்தைச் சார்ந்தவையாகும். இச்சிலைகளுடன் ஒரு விநாயகர் சிலையும் உள்ளது. இதுவும் பல்லவர் காலத்தைச் சேர்ந்ததே ஆகும்.

## வந்தவாசிக் கோட்டை

சென்னையிலிருந்து சுமார் 120 கி.மீ. தொலைவில் உள்ளது வந்தவாசி. நிறைந்த அளவில் பேருந்துகள் சென்னையிலிருந்து செல்லுகின்றன. வந்தவாசியிலேயே உணவகங்களும், தங்கும் வசதியும் உள்ளன. வந்தவாசிக் கோட்டை, நகரின் நடுவில் உள்ளது. இக்கோட்டையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல போர்கள் நிகழ்ந்துள்ளன. அதில் சிறப்பானது கி.பி. 1760-இல் நடந்த மூன்றாவது கர்நாடகப் போர் நிகழ்ச்சி ஆகும். வந்தவாசிப் போரில் பிரெஞ்சுப் படைகளும் ஆங்கிலப் படைகளும் மோதின. பிரெஞ்சுப் படை லாலி என்பார் தலைமையிலும், ஆங்கிலப் படை சர் அயர் கூட் தலைமையிலும் எதிர்த்துப் போரிட்டன. இப்போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்று பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இக்கோட்டை கி.பி. 16 - 17-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## வேலூர்-கண்டி நாயக்க மன்னர் கல்லறை

கண்டி நாயக்க மன்னரது கல்லறைகள் இன்று வேலூரில் ஒரு ஒதுக்குப்புறத்தில் காணப்படுகின்றன. வேலூர் பேருந்து நிலையத்திலிருந்து பழைய காட்பாடி சாலையில் சுமார் இரண்டு கி.மீ.

தொலைவு சென்றால் தோட்டப்பாளையம் எனும் இடத்தை அடையலாம். இப்பகுதி தற்போது அருகந்தம்பூண்டி என வழங்கப் படுகிறது.

இங்கு சுமார் 40 அடி சதுரத்தில் ஒரு சுற்று வளைவுக்குள் ஏழு கல்லறைகள் காணப்படுகின்றன. அவற்றில் பெரியதாக உள்ளது கண்டி வேந்தன் ஸ்ரீ விக்ரம ராசசிங்கனின் கல்லறையாகும்.

"கண்டி மஹாராஜா ஸ்ரீ விக்ரம ராசசிங்கன் மரணம் 1832" என்று கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது.

மேலும் இக்கல்லறை அம்மன்னனின் கொள்ளுப் பெயரன் விக்ரம இராசசிங்கரால் 27-7-1932-இல் புதுப்பிக்கப்பட்டது. இரு கல்லறை கல்வெட்டுக்களில் இருந்து கண்டி மன்னன் ஸ்ரீ விக்ரம சிங்கரின் கொள்ளுப் பெயரன் ஸ்ரீ விக்ரம சிங்கராஜா என்பதும், அவரது மனைவி இராசலெட்சுமி என்பதும் அறிய வருகிறது.

கண்டியை ஆட்சி புரிந்த இலங்கை அரசன் ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி புரிந்தவன். அவனுக்குப் பின் கண்டிப் பகுதியை அரசாள மதுரை நாயக்க வம்சத்தில் இருந்து தனது பட்டத்தரசியின் சகோதரனைக் கண்டிக்குக் கொண்டு சென்றான். அவனுக்கு ஸ்ரீ விஜயராசசிங்கன் என்று பெயர் சூட்டி ஆட்சிக் கட்டிலேற்றினான். இம்மன்னன் கி.பி. 1739-இல் இருந்து 1747 வரை ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பின் கீர்த்தி ராசசிங்கன் (1747-1782) இராஜாதி இராச சிங்கன் (1782-1798) மற்றும் ஸ்ரீ விக்ரம இராசசிங்கன் (1798-1815) ஆகியோர் கண்டியில் ஆட்சி புரிந்தனர்.

ஸ்ரீ விக்ரம ராசசிங்கன்தான் கண்டி அரசின் கடைசி மன்னன். இவன் மிகவும் சிறந்த முறையில் ஆட்சி புரிந்துள்ளான். இவனது

ஆட்சிக் காலத்தின் தொடக்கம் அமைதியாகவும், இறுதிப் பகுதி போர் நிகழ்ச்சிகளிலும் கழிந்திருக்கிறது. இலங்கை அரச வம்சத்தினர் எவ்வாறு மதுரை அரசுடன் தொடர்பு கொண்டிருந்தார்களோ அதே போன்று இம்மன்னனும் தொடர்பு வைத்திருந்தான். இம்மன்னனின் பட்டத்தரசியும், மற்றும் இரு அரசிகளும் மதுரை நாயக்க வமிசத்தைச் சார்ந்தவரே.

இம்மன்னனின் செல்வாக்கை அறிந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தொடக்கக்காலத்தில் இவரோடு உறவுகொண்டிருக்கவே விரும்பியது. ஆனாலும் இம்மன்னனுக்கும் குடிமக்களுக்கும் இடையே வளர்ந்து வந்த நன்னம்பிக்கையை ஊன்றி கவனித்து வந்த ஆங்கில அரசு இதை இப்படியே வளர விட்டால் தாங்கள் இலங்கை மண்ணிலேயே இருக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என அஞ்சி, இம்மன்னனோடு போர் தொடுக்கக் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி காத்திருந்தது. இலங்கை கடற்கரைப் பகுதியில் இருந்த வணிகர்களிடம் பாக்கு மூட்டைகளைக் கண்டி வேந்தன் கைப்பற்றியது தவறு என்ற நொண்டிக் காரணத்தைக் காட்டி கண்டி மன்னர் மீது போர் தொடுத்தது. இதை முன்பே எதிர்பார்த்த மன்னர் கண்டியை விட்டு தம் அரசியர், உறவினர்களோடு வேறொரு இடத்திற்குச் சென்றுவிட்டார். துரோகத் தளபதியின் உதவியால் மன்னன் இருக்குமிடத்தை அறிந்து கொண்ட கும்பினிப் படை அவ்விடம் நோக்கி அதிவேகமாக முன்னேறியது. அதனையும் எதிர்பார்த்த விக்ரம இராசசிங்கர் அவ்விடத்தை விட்டு அகன்றிருந்தார். பின்னர் ஆங்கிலேயர் விடுத்த அழைப்பை ஏற்று விக்ரம இராசசிங்கர் ஓர் உடன்படிக்கைக்கு உட்பட வேண்டியதாயிற்று. பின்னர் சில காலம் அமைதியான ஆட்சியும் நடத்தினார். மீண்டும் ஆங்கிலேயருக்கும் அவருக்கும் போர் ஏற்பட்டு இறுதியில் கைது செய்யப்பட்டு பன்றிகளை பிணைத்து வருவது போல் அவரை இழுத்து வந்தனர். இதனை ஆங்கிலேய உயர் அதிகாரிகள் விரும்பாமல் உரிய மரியாதையை அரசருக்கு அளித்து அழைத்து வர ஆணையிட்டனர்.

அரசனும், அரசியும் கொழும்புக்கு, கொண்டு செல்லப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். பின்னர் தமிழகம் கொண்டு வரப்பட்டு, மன்னரும் பட்டத்தரசிகளும் வேலூருக்கும் மற்ற உறவினர்கள் தஞ்சாவூருக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். இந் நிகழ்ச்சி நடந்தது கி.பி. 1816-இல் ஆகும். வேலூரில் அமைதியாக வாழ்ந்து வந்த கண்டி மன்னர் விக்ரம இராசசிங்கர் 1832 ஜனவரித் திங்கள் 30-ஆம் நாள் உயிர் நீத்தார். அவரது கல்லறையும் மற்றும் அவரது உறவினர்களது கல்லறைகளும்தான் இன்று வேலூரில், அருகந்தம்பூண்டியில் காணப்படுபவையாகும்.

★

# தென் ஆற்காடு மாவட்டம்

## உலகாபுரம்-சிவன் கோயில்

திண்டிவனத்திலிருந்து 18 கி.மீ. தொலைவில் உப்பு வேலூர் செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது. இங்கு செல்வதற்கு பேருந்து வசதி உண்டு. திண்டிவனத்தில் உணவகமும், தங்கும் வசதிகளும் உண்டு.

இராசராசசோழ மன்னனின் பட்டத்தரசியான தந்திசக்தி விடங்கி என்னும் உலோக மகாதேவி என்பவர் பெயர் பெற்று உலோக மகாதேவிபுரம் என இவ்வூர் அழைக்கப்படுகிறது.

இங்குள்ள சிவன் கோயில், 'கைலாசமுடையார் கோயில்' எனவும் 'அரிகுல கேசரி ஈசுவரம் உடையார் கோயில்' எனவும் கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகிறது. இக்கோயிலிலுள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டு 'ஓய்மா நாட்டு தனியூரான உலோக மாதேவிபுரம் ஸ்ரீ கைலாயத்து பரமசுவாமி கோயிலுக்கு' அம்பலவன் கண்டராதித்தனார். என்பவரால் 96 ஆடுகள் தானமளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. மேலும் இவராலேயே இக்கோயில் கட்டப்பட்டது என்பதையும் இக்கல்வெட்டினால் அறியமுடிகிறது. பிற்காலச் சோழர் கல்வெட்டில் 'அரிகுல கேசரி ஈசுவரம் உடையார்' என இங்குள்ள இறைவனின் பெயர் குறிக்கப்படுகிறது. ஓய்மா நாட்டின் ஒரு பிரிவான பேரையூர் நாட்டில் இவ்வூர் அடங்கியிருந்த தாகவும் தெரியவருகிறது. இவ்வூரில் இருந்த நகரத்தார் (Merchant Guild) இக்கோயிலில் இராஜேந்திர சோழவிடங்கர் சந்நிதி கட்டு வதற்கு நிலம் தானமளித்ததாக ஒரு கல்வெட்டு புலப்படுத்துகிறது.

இக்கோயில், கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற அமைப்புகளைக் கொண்டதாக விளங்குகிறது. மேலும் இக்கோயிலைச் சுற்றி அஷ்ட பரிவார தேவதைகளின் சந்நிதிகள் இருந்ததற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன.

## பெருமாள் கோயில்

பெருமாள் கோயில் இவ்வூரின் மேற்குப் பகுதியில் உள்ளது. இக்கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டில் இதற்கு முன்னர் இக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற தானங்கள் கல்வெட்டாக பொறிக்கப்பட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது. இறைவனின் பெயர் 'அரிஞ்சய விண்ணகர் வீற்றிருந்த ஆழ்வார்' எனக் கல்வெட்டில் கூறப்படுகிறது. மேலும் இவ்வூரில் இருந்த ஏரிகளின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள இராச மகேந்திரனின் 3-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு சுந்தர சோழப் பெரும்பள்ளி என்று அழைக்கப்பட்ட சமணக் கோயில் இருந்ததைத் தெரிவிக்கிறது.

இவ்வூரில் 'தெற்கில் வாசல் மகாசாத்தனார்' அய்யனார் கோயில் 'கோகர்ணீசுவரம் உடைய மகாதேவர் கோயில்' போன்ற கோயில்கள் இருந்ததாகவும் கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகிறது.

முதலாம் இராசராசனின் பட்டத்தரசியின் பெயரால் இவ்வூர் அமைந்திருப்பதும், முதலாம் இராசராச சோழனின் தந்தை சுந்தர சோழனின் பெயரால் சுந்தர சோழப் பெரும்பள்ளி என்ற சமணக் கோயில் ஒன்று இருந்ததும், இவ்வூர் அக்காலத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊராகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பதைத் தெற்றென நமக்கு உணர்த்துகின்றன.

## கண்டமங்கலம்

தென்ஆற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் கண்டமங்கலம் எனும் ஊர் உள்ளது. விழுப்புரம் - பாண்டிச்சேரி நெடுஞ்சாலையில் விழுப்புரத்திலிருந்து 22 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. பாண்டிச்சேரியிலும், விழுப்புரத்திலும் தங்கும் வசதி, உணவகங்கள் உள்ளன.

இவ்வூர் கண்டமங்கலம் எனும் பெயர் ஸ்ரீ கண்டராதித்த மதுராந்தக மங்கலம் எனும் சோழர் காலத்துப் பெயரின் திரிபாகும். ஸ்ரீ கண்டராதித்த மதுராந்தக தேவரின் பெயரைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இங்கு மூன்று கோயில்கள் இருந்திருக்கின்றன. ஒன்று சிவன் கோயில். மற்றவை வைணவக் கோயில்கள் ஆகும். சிவன் கோயில் திருநாரீஸ்வரம் என்று போற்றப்பட்டது. 'திருநாரீஸ்வரத்து மகா தேவர்' என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கோயில் ஊரின் தென்மேற்கே அமைந்துள்ளது. மிகுந்த இடிபாடுகளுடன் காணப் படுகிறது. இருப்பினும் இங்குள்ள கல்வெட்டுகள் இதன் பழமையை உணர்த்தி நிற்கின்றன.

கன்னரதேவனின் ஆட்சிக் காலத்தில் சங்கரப்பாடியைச் சேர்ந்த அபயன்மாதேவன் என்பவன் இவ்விறைவனுக்கு விளக்குத் தானமாக ஆடுகள் வழங்கினான். ஸ்ரீ கண்டராதித்த மதுராந்தகத் தேவர் ஊர்ச் சபையாரிடம் 58 காசுகளுக்குச் சில நிலங்களை விலைக்குப் பெற்று அவற்றைத் திருச்சென்னடைத் தேவைக்காக இம்மாதேவர்க்கு தானமளித்தான். அரசர் ஒருவரின் நேரடியான கொடையைப் பெற்ற பெருமை இக்கோயிலுக்கு உண்டு. சடையன் என்பவன் இக்கோயிலுக்கு கைமணி ஒன்றும் காளம் இரண்டும் வழங்கிய செய்தியும் அறிய முடிகிறது.

இரண்டு வைணவத் தலங்களில் ஒன்றின் இறைவன் "செயந் தாங்கி விண்ணகர் எம்பெருமான்", "செயந்தாங்கி விண்ணகர் ஆழ்வார்" என்றும், "செயந்தாங்கி விண்ணகர்ப் பரமசுவாமி" என்றும் அழைக்கப்பெற்றார்.

திரிபுவன மாதேவிச்சதுர்வேதிமங்கலத்துச் சபை இவ்வாழ் வார்க்குத் திருச்சென்னடை திருவிளக்கு, உகச்ச போகம் உள்ளிட்ட தேவைகளுக்காக கி பி. 10-ஆம் நூற்றாண்டில் ஆறு காணி நிலங்களைத் தானமாக வழங்கியது. புத்தன் களவன் என்னும் மன்றாடி நுந்தாவிளக்கு ஒன்று எரிக்க 90 ஆடுகளை மூலதனமாகக் கொடுத்தான். "செயந்தாங்கி ஆசாரியன்" என்னும் கல்தச்சன் ஊர்ச்சபையின் முடிவுகளை இக்கோயிற் கற்களில் கல்வெட்டுக்களாக வரைந்துள்ளான்.

இராசராசன் காலத்துக் கல்வெட்டு ஒன்று, திருவாய்ப்பாடி ஆழ்வார்க்கு நித்த நிவேதனங்கள் செய்யும் பொருட்டு ஊர்ச்சபை

யிடம் நிலங்கள் வாங்கிப் பெற்றதும், இவ்வூரைச் சார்ந்த ஸ்ரீபாதக் கிரமவித்தன் மகன் சீராளன் என்பவன் இக்கோயிலில் விளக்கு எரிக்க ஆடுகள் வழங்கியுள்ளமையும் கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன.

## கீழ்வாலை

இவ்வூர் தென்னாற்காடு மாவட்டத்தில் சென்னையிலிருந்து திருக்கோயிலூர் செல்லும் நெடுஞ்சாலையில் விழுப்புரத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. விழுப்புரத்தில் தங்கும் விடுதியும், உணவகமும் உள்ளன.

இவ்வூரில் உள்ள குன்றுகளில் ஒன்று 'ஏத்தப்பாறை' என அழைக்கப்படுகிறது. அதில் காவி வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ள வரலாற்றுக்கும் முந்திய கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவில் மனிதன் ஒருவன் குதிரை மீதமர்ந்திருக்கின்றான். மற்றொருவன் அக்குதிரையின் கடிவாளக் கயிற்றைப் பிடித்திருக்கிறான். மூன்றாமவன் தனது இரு கைகளையும் பக்கவாட்டில் விரித்து அவர்கள் இருவரையும் வரவேற்பவன் போன்று அவர்கள் முன்பாக நிற்கிறான். இம்மூன்று மனிதர்களின் மூக்கும் நீண்ட பறவைகளின் அலகு போன்று காணப்படுகிறது. நடுவில் உள்ளவனின் தலையில் முடி அலங்காரம் உள்ளது. குதிரையில் அமர்ந்திருப்பவனின் இடையிலும் குதிரையின் சேணத்தைப் பிடித்திருப்பவனின் இடையிலும் குறுவாள் காணப்படுகிறது.

இரண்டாம் பிரிவில் நான்கு மனிதர்கள் ஒருவரோடொருவர் கைகோர்த்த வண்ணம் நிற்கின்றனர். அவர்கள் ஒரு ஓடத்தின் மீது நிற்பது போன்று காட்டப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவ்ன் கையில் ஒரு நீண்ட கம்பு உள்ளது. இவன் ஓடத்தைச் செலுத்துபவனாக இருக்கலாம். இந்த ஓவிய கால மக்கள் ஆற்றைக் கடக்கத் தெரிந்திருந்தனர் என்பதையும், மீன் பிடித்துச் சமைத்து உண்ணும் வழக்கத்தைப் பெற்றிருந்தார்கள் என்பதையும் காட்டுவனவாகக் கொள்ளலாம். இவர்கள் மூக்குகளும் பறவைகளின் அலகு போன்றே தீட்டப்பட்டுள்ளன.

மூன்றாம் பிரிவில் சில குறியீடுகள் உள்ளதைக் குறிப்பிடலாம். இக்குறியீடுகள் ஹாரப்பன் கால களிமண் தகடுகளில் காணப்பெறும் சித்திரங்கள் போன்றே தோற்றமளிக்கின்றன.

குன்றின் மற்றொரு பகுதியில் காணப்பெறும் ஓவியங்களை நான்காம் பிரிவாகக் குறிப்பிடலாம். இவ்வோவியத்தில் ஆறு மனிதர்கள் வரிசையாக நிற்பது போன்று வரையப்பட்டுள்ளனர். இக்குன்றுகளின் அருகில் கறுப்பு சிவப்புப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. ஆதலால் இவ்வோவியங்களைப் புதிய கற்கால இறுதிப் பகுதியிலிருந்து மாறுகின்ற இரும்பு காலத் தொடக்கப் பகுதியைச் சார்ந்தது எனக் கூறலாம். அதாவது கி. மு. 1000-லிருந்து கி. மு. 500 வரையுள்ள காலமாகும்.

## செத்தவரை

கீழ்வாலையிலிருந்து மேற்கே .5 கி.மீ. தொலைவில் வேட்டவலம் என்னும் சிறு நகரம் உள்ளது. இதற்கு அருகில் மூன்று கி.மீ. தொலைவில் செத்தவரை என்னும் ஒரு கிராமம் உண்டு. இவ்வூரின் அய்யனார் மலையில் காணப்படும் இயற்கை குகைத் தளங்களில் வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களில் மான், எருமைகள், புலி, காட்டுப்பன்றி, மீன் மற்றும் சில குறியீடுகள் காணப்படுகின்றன. சில உருவங்களில் வெளிக்கோடுகள் காவி வண்ணத்திலும், உள்பகுதி வெள்ளை வண்ணத்திலும் வரையப் பெற்றுள்ளன. இங்கு காணப்படும் எல்லா உருவங்களிலும் மான் உருவம் ஒன்றும் மீன் உருவம் ஒன்றும் மிகச் சிறந்த முறையில் வரையப் பெற்றுள்ளன. ஒரு கோலில் இறைச்சித் துண்டைக் கோர்த்துத் தீயில் வாட்டுவது போன்று காணப்படுகிறது. தீச்சுடர் கொழுந்து விட்டு எரிவது போல் வரையப்பட்டுள்ளது. இக்காட்சி, இவ்வோவியக் கால மக்கள் விலங்குகளை வேட்டையாடி இறைச்சியைத் தீயிலிட்டு உண்ணும் வழக்கத்தினர் என்பதையும்; மீன் உருவம், அவர்கள் மீன் பிடிக்கத் தெரிந்திருந்தார்கள் என்பதையும் காட்டுவதாக உள்ளன. விலங்குகளின் இறைச்சியை ஒரு கோலில் கோர்த்துத் தீயில் சுடும் வழக்கம் சங்க காலத்திலும் தொடர்ந்து இருந்ததாகத் தெரிய வருகிறது. செத்தவரையிலுள்ள ஓவியங்களின்

ஊடே ஒரு மனித உருவமும் காணப்படுகிறது. இம்மனிதனின் மூக்கும் கீழ்வாலை ஓவியத்திலுள்ள மூக்கு போன்றே உள்ளது. இந்த மனிதனின் இடுப்பில் குறுவாள் ஏதும் காணப்படவில்லை. ஆதலால் இவ்வோவியங்கள் கீழ்வாலை ஓவியங்களைவிடச் சற்று பழமை வாய்ந்ததாகத் தோன்றுகின்றன. அதாவது கி.மு. 1000-க்கும் முற்பட்டதாக இருக்கலாம்.

## தியாகதுருகம்

தென்ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் தியாக துருகம் எனும் ஊர் அமைந்துள்ளது. உளுந்தூர்பேட்டை - கள்ளக் குறிச்சி நெடுஞ்சாலையில் சுமார் 25 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இவ்வூருக்குச் செல்லப் பேருந்து வசதி உண்டு. கள்ளக் குறிச்சியில் தங்கும் வசதியும் உணவகங்களும் உள்ளன. தியாகதுரு கத்தின் தெற்குப் பகுதியில் ஓர் உயர்ந்த மலையின் மேல் கற்களால் சுவர் எழுப்பப்பட்டு கோட்டை ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சுமார் 800 அடி உயரம் உள்ள இம்மலையில் காணப்படும் கற்கோட்டைச் சுவர்கள் மலையைச் சுற்றிலும் காணப்படுகின்றன. இதன் காலம் கி.பி. 16 - 17-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். மேலே செல்வதற்குப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. கோட்டைச் சுவர் சில இடங்களில் சிதைந்து காணப்படுகிறது.

மலைக்கோட்டையின் உள்ளே உச்சிக் கோட்டை என்னும் பகுதியில் மாட்டுப்பட்டி, பணக்கொட்டடி, பொன் கொட்டடி, இராமன் பாறை, கோட்டை அறை, பீரங்கி, செங்கல் அறை என்பன உள்ளன. சாமியார் கொட்டடி என்னுமிடத்தில் சுப்பிரமணியர், மலையம்மன் கோயில்கள், ஒரு கிணறு ஆகியவை காணப்படுகின்றன.

1756-இல் பிரெஞ்சு வசம் இருந்த இக்கோட்டை 1760-இல் ஹைதர்அலி வசம் சென்றது. பின்னர் 1790-இல் திப்பு சுல்தான் இதனைக் கைப்பற்றி இராணுவத் தளமாக அமைத்தார். மைசூர் மன்னரான ஹைதர்அலி ஆங்கிலேயரை வெறுத்தார். ஆதலின் அவரும் அவர் மகனும் ஆங்கிலேயருடன் பல போர்கள் புரிந்தனர்.

இப்போர்களில் முக்கிய நிகழ்ச்சிகள் பல தென்ஆற்காடு மாவட்டத்தில் நிகழ்ந்தன. ஹைதர்அலி தென்ஆற்காடு மீது படையெடுத்து வந்து திருவண்ணாமலை அருகில் இருந்த ஆங்கிலேயரைச் சென்னைக்குத் துரத்தினார். பிறகு கடலூரையும், தியாகதுருகத்தையும் கைப்பற்றினார். அப்பொழுது ஆங்கிலப் படைத்தலைவர் அயர்கூட் அவரைப் பின்தொடர்ந்து சென்றார். பரங்கிப்பேட்டைக்கு அருகில் மீண்டும் போர் நடந்தது என்றும், அப்போரில் ஹைதர் அலி தோல்வி அடைந்தார் என்றும் வரலாறு கூறுகிறது. ஹைதருக்குப் பின் திப்புசுல்தான் ஆங்கிலேயரை எதிர்த்தார். 1790-இல் இக்கோட்டையை மீண்டும் கைப்பற்றித் தனது இராணுவ தளத்தை இங்கே அமைத்ததாகவும் தெரிகிறது. இவரது மறைவுக்குப் பின் மீண்டும் இக்கோட்டை ஆங்கிலேயர் வசம் நிரந்தரமாகச் சென்று விட்டது என்று கூறப்படுகிறது.

## திருக்கோயிலூர்

**கபிலர் குன்று :** விழுப்புரம்-காட்பாடி புகைவண்டித் தடத்தில் திருக்கோயிலூர் அமைந்துள்ளது. இவ்வூருக்குச் சென்னை, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் இருந்து செல்லப் பேருந்து வசதி உண்டு. உணவு, தங்கும் வசதிகள் ஆகியன இவ்வூரிலேயே உள்ளன.

சங்க காலத்தில் திருக்கோயிலூர்ப் பகுதியை மலையமான் குல மன்னர்கள் ஆண்டு வந்தனர். சோழ மாமன்னன் முதலாம் இராஜ ராஜனின் தாய் இக்குலத்தைச் சார்ந்தவராவார்.

சங்கப் புலவர் கபிலரின் நெருங்கிய நண்பர் கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரி ஆவார். முடியுடை மூவேந்தர்களும் முற்றுகையிட்டுப் பாரியையும், பறம்பு நாட்டையும் அழித்துவிட, பாரி தன் பெண் மக்கள் இருவரையும் கபிலரிடம் அடைக்கலப்படுத்தி இறந்துவிடவே, கபிலர் பல்வேறு வேளிரிடமும் அவர்களை அழைத்துச்சென்று, அவர்களைத் திருமணம் செய்துகொள்ளும்படி வேண்டினார். எல்லாரும் மறுத்துவிடவே இறுதியாகத் திருக்கோயிலூர் மலையமான் திருமுடிக்காரியிடம் அவர்களை ஒப்படைத்துவிட்டுக் கபிலர் உயிர்

நீத்தார் என்பது சங்க நூல்களில் இருந்தும், அதன் துறைகளில் இருந்தும் பெறும் வரலாற்றுச் செய்திகள் ஆகும்.

திருக்கோயிலூர் வீரட்டானத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முதலாம் இராஜராஜன் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கபிலர் இங்கு வந்து மலையமானிடம் பாரியின் பெண்களை அடைக்கலப்படுத்திவிட்டு இங்குள்ள கல்லொன்றில் தீ வளர்த்து உயிர் நீத்தார் என்று கூறப்பட்டுள்ளது. அச்செய்தியைக் கூறும் கல்வெட்டு வரிகள் வருமாறு :

"தெய்வக்கவிதைச் செஞ்சொற் கபிலன் மூரிவண்தடக்கைப்
பாரிதன் அடைக்கலப் பெண்ணை மலையர்க்குதவிப்
பெண்ணை அலைபுனல் அழுவத் தந்த்ரிக்ஷும் செல
மினல்புகும் விசும்பின் வீடுபேறெண்ணிக்
கனல் புகும் **கபிலக் கல்லது**".

திருக்கோயிலூர் அருகே ஓடும் பெண்ணையாற்றின் நடுவே ஒரு சிறு பாறையும், அப்பாறையின் மீது ஒரு கோயிலும், அக் கோயிலைச் சுற்றிவர வழியும் உள்ளன. இப்பாறையைக் 'கபிலக் கல்' என்று இவ்வூரார் இன்றும் அழைக்கின்றனர். இந்தப் பாறையில், கபிலர் உயிர் நீத்ததால், இதற்குக் 'கபிலர் கல்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

★

# தருமபுரி மாவட்டம்

## காதக் கல்

தருமபுரியில் இருந்து பெங்களூர் செல்லும் நெடுஞ்சாலையில், அதியமான் கோட்டையில் இருந்து வடக்கில் சுமார் ஆறு கி.மீ. தொலைவில் முற்காலத்தில் அமைக்கப்பட்ட மைல் கல் ஒன்று நிற்கிறது. தருமபுரியில் இருந்து பேருந்து மூலம் இவ்விடத்தை அடையலாம். தங்கும் வசதியும் உணவகங்களும் தருமபுரியில் உள்ளன.

சங்க காலம் முதல் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டுவரை சில காலங்கள் நீங்கலாக ஆட்சிப் பொறுப்பைக் கொண்டிருந்த குறுநில மன்னர்கள் அதியமான் மரபினர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், இம்மரபில் வந்த விடுகாதழகிய பெருமாள் என்ற மன்னன், பெரும் நிலப் பரப்பை ஆட்சி செய்தவன். பல நெடுஞ்சாலைகளை அமைத்துத் தொலைவினைக் குறிக்கும் காதக் கற்களையும் நிறுவியிருக்கிறான் இம்மன்னன். அவற்றுள் ஒன்றுதான் இங்கு குறிக்கப்படும் பெருவழிக் கல் ஆகும்.

'அதியமான் பெருவழி-நாவற்தாவளத்துக்கு காதம் உகூ' என்று எழுத்தாலும், 29 என்பதை மேல் வரிசையில் இரு பெரிய துளைகளும், கீழே ஒன்பது சிறிய துளைகளும் இட்டுக் காட்டியும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுபோலவே தருமபுரி - கிருஷ்ணகிரி சாலையில் தருமபுரியிலிருந்து ஏழு கி.மீ. தொலைவில் உள்ள கொங்கி செட்டி பட்டி என்ற ஊரின் அருகிலேயும் ஒரு காதக் கல் கிடைத்துள்ளது. அதில் அதியமான் பெருவழி-நாவற்தாவளத்திற்குக் காதம் உஎ என்றும், அதே முறையில் துளையிட்டும் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கற்களும் தற்போது இருக்கும் இடம் அமைக்கப்பட்ட நாளிலிருந்தே மாறாதுள்ளதெனக் கருதினால், இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இன்றைய தூரம் பத்து மைல் என்பதால் ஒரு காதம் ஐந்து மைல் என்று கொள்ள இடமேற்படுகிறது.

## மல்லப்பாடி ஓவியங்கள்

கிருஷ்ணகிரி - திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் சுமார் 18 கி.மீ. தூரத்தில் மல்லப்பாடி என்ற ஊர் உள்ளது. இவ்வூரின் கிழக்கே 2,364 அடி உயரமுள்ள மலையும், மலை மீது கோட்டையும் உள்ளது. இம்மலையின் அடிவாரத்தில் இரண்டு மலைக் குகைகளில் பெருங் கற்கால ஓவியங்கள் உள்ளன. இவ்வோவியங்கள் உள்ள குகை களுக்குச் செல்லும் வழியில் இராமசாமி கோயில் மற்றும் கிருஷ்ண சாமி கோயில் உள்ளன. இக்கோயில்கள் விஜயநகரப் பேரரசர் காலத்தில் கட்டப்பட்டவையாகும். காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு எனலாம். கோயில்களில் கல்வெட்டுகள் இல்லை. எனினும் அருமை யான சிற்பங்கள் உள்ளன. கிருஷ்ணசாமி கோயிலில் திருமாலின் பல்வேறு அவதாரங்களும், அரசன் அவனுடைய தேவிமார் ஆகியோர் சிற்பங்களும் உள்ளன. இம்மல்லப்பாடி ஹைதர் மற்றும் திப்புவின் ஆட்சியின்கீழ் இருந்துள்ளது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஜெகதேவிராயனுடைய பாரமகால்களில் (12 கோட்டை) ஒன்றாக இக்கோட்டையும் இருந்துள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் தாலுக்கா வாகவும் மல்லப்பாடி விளங்கியிருக்கிறது.

★

# கோவை மாவட்டம்

கோவை நகரிலிருந்து மேற்கே சுமார் 25 கி.மீ. தூரத்தில் வெள்ளெருக்கம்பாளையம் அமைந்துள்ளது இங்கிருந்து சுமார் நான்கு கி.மீ. தூரத்தில் வேட்டைக்காரன்மலை உள்ளது. இவ்வூர் மக்கள் இம்மலையினைக் 'காரை ஊத்துக்காடு' என்றும் 'வேடர் பாத்தி' என்றும் அழைக்கின்றனர்.

இம்மலையின் மீது சுமார் 2,500 அடி உயரத்தில் இயற்கையாக அமைந்த குகைகள் காணப்படுகின்றன. வேடர்பாத்தியில் காணப் படுகின்ற முதலாவது குகையில் பண்டைய மக்கள் வாழ்ந்திருக்கக் கூடும். இக்குகை சுமார் 20 அடி உயரமும், 300 அடி அகலமும் கொண்டு கிழக்கு மேற்காக அமைந்துள்ளது. வெளிப்பகுதி விரிந்து உள்ளே 15 அடி அகலமும், 10 அடி நீளமும், 8 அடி உயரமும் உள்ள ஒழுங்கற்ற வட்ட வடிவமான அறை ஒன்று காணப்படுகிறது.

இக்குகையில் ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங் கள் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன. குகையின் வெளிப் புறத்திலும், வலப்புறத்திலும் மற்றும் விதானப் பகுதியிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. குகையின் முன்புறத்தில் மனித உருவங்கள் நடனமாடும் நிலையில் தீட்டப்பட்டுக் காட்சி தரு கின்றன. மனித உருவங்களின் கால்களுக்கு அடியில் ஆண் யானை ஒன்றும் அதன் தும்பிக்கையைத் தொட்டவண்ணம் ஒரு கலைமானும் காணப்படுகின்றன. ஆண் யானையின் அடியில் ஒரு பெண் யானை யின் உருவம் அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. ஒரு விலங்கின் மேல் மனிதன் அமர்ந்த நிலையில் உள்ள ஒரு ஓவியமும் காணப்படுகிறது. இது குதிரையாக இருக்கலாம். இதன் வால் பகுதி பிளவுற்று காணப்படுகிறது.

குகையின் மேல்தட்டில் ஏழு மனித உருவங்கள் கைகோர்த்தபடி நடனமாடும் நிலையில் காணப்படுகின்றன. வலதுகோடியில் ஒரு

மனித உருவம் காணப்படுகிறது. கணித வடிவமைப்புக்களும் (**Mathematical Signs**) வரையப்பட்டுள்ளன. குகையின் வலப்புறத்தில் விலங்கின் மேல் அமர்ந்த மனிதன் உருவம் ஒன்று காட்சியளிக்கிறது. இரண்டாவது குகை முதல் குகையினைப் போன்றல்லாமல் சுற்றிலும் படுக்கைகள் போன்ற அமைப்பை உள்ளடக்கிக் காணப்படுகிறது. இங்கு யானையின் மேல் அமர்ந்த நிலையில் மனித உருவம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. அருகில், ஒரு குதிரையின் மேல் ஒரு மனிதன் அமர்ந்த நிலையில், கையில் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தவண்ணமும், மற்றொரு கையில் ஈட்டி எறியும் நிலையிலும் ஒரு ஓவியம் காணப்படுகிறது. இதன் கீழ் ஒரு விலங்கின் மேல் மனிதன் அமர்ந்த நிலையில் மற்றொரு ஓவியம் வரையப்பட்டுள்ளது. இம்மனித உருவத்தின் ஒரு கை மேல் நோக்கியும், மற்றொரு கை விலங்கைப் பற்றிய வண்ணமும் உள்ளது.

இவ்விரண்டு குகைகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு குதிரை வீரர்கள் நேருக்கு நேர் போரிடும் காட்சி வரையப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் கையில் வில் அம்பு ஏந்தியவண்ணம் இருக்கின்றனர். மேற்கூறப்பட்டுள்ள ஓவியங்கள் அனைத்தும் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களின் காலம் சுமார் கி.மு. 400-லிருந்து கி.மு. 100 வரை இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

★

# சேலம் மாவட்டம்

## அம்மன்கோயில்பட்டி

சேலத்திலிருந்து ஓமலூர் வழியாகத் தாரமங்கலம் செல்லும் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது. தங்கும் வசதியும் உணவகங்களும் சேலத்திலும் ஓமலூரிலும் உள்ளன.

இவ்வூரில் உப்பாறு ஓடுகிறது. இவ்வாற்றின் வடகரையில் இயற்கையாய் அமைந்த பாறை ஒன்றுள்ளது. அங்கு ஒரு சுனையும் சுனையின் அருகில் கல்வெட்டு ஒன்றும் உள்ளன. இக்கல்வெட்டு கி.பி. இரண்டு மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

''வரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன் கோபன் கணதேவன் தொட சுனை'' கோகூர்த் தலைவன் வரம்பன் என்பானின் மகன் வியக்கன் கோபன் கணதேவன் என்பவன் இச்சுனையை வெட்டியுள்ளான். வரம்பன் என்ற சொல் சேர மன்னர் பெயருடன் தொடர்புடையதாக உள்ளது. மேட்டூர் வட்டம் கோனூர் என்ற ஊரில் வீரராமநாததேவனுடைய 20-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் கோகையூர் என்ற ஊர் குறிக்கப்படுகிறது. அந்தக் கோகையூருக்கும் அம்மன் கோயில்பட்டியில் வரும் கோகூருக்கும் நெருங்கிய பெயர் ஒற்றுமை உள்ளது. மேலும் அம்மன்கோயில்பட்டிக்கும் இந்த கோகையூர் என்ற கோனூருக்கும் தூரம் அதிகமில்லை எனலாம். கோனூர் வரலாற்றுச் சிறப்புடைய புதைமேடுகளையும் கல்வெட்டுகளையும் கொண்டுள்ளது. அம்மன்கோயில்பட்டி கல்வெட்டைப் புது. பே. வெங்கட்ராமன் கண்டுபிடித்தார். சுனைக்கு அருகில் உள்ள இக்கல்வெட்டு சேலம் மாவட்டத்திலேயே தொன்மையானதாகும்.

★

# தஞ்சை மாவட்டம்

## சடையார் கோயில்

தஞ்சை மாவட்டத்தில் கோவிலடி என்னும் ஊருக்கு வடக்கில் ஒரு மைல் தொலைவில் கொள்ளிடத்தின் தென் கரையில் அமைந்துள்ள ஊர் திருச்சின்னம்பூண்டி. தஞ்சாவூர்-கல்லணை பேருந்தில் சென்று கோவிலடியில் இறங்கி, இவ்வூருக்கு நடந்து செல்ல வேண்டும். கல்லணையில் தங்கும் வசதியும் உணவகமும் உள்ளன.

இவ்வூருக்குத் திருச்சடைமுடி என்றும், இவ்வூர் கோயில் இறைவனுக்குத் திருச்சடை முடி உடைய மகாதேவர் என்றும் பெயர் இருந்தமையைக் கோயிலடிச் சிவன் கோயில் கல்வெட்டால் அறிய முடிகிறது.

இக்கோயிலின் நுழைவாயிலிலும், முன்புறம் உள்ள தூண்களிலும் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கன் ஆகியோரது கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்றாம் நந்திவர்மனின் அரசி அடிகள் கண்டன்மாறம்பாவை கொடுத்த கொடையைப் பற்றி ஒரு கல்வெட்டு கூறுகிறது.

சோழ அரசன் முதலாம் பராந்தகன் காலத்துக் கல்வெட்டுக்கள் பல இக்கோயிலில் உள்ளன. அவனது 14-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இக்கோயில் இறைவன் தென்கரை இடையாற்று நாட்டில் இருந்த திருச்சடை முடி மகாதேவர் எனப் பெயர் பெற்றுள்ளதைக் கூறும். பராந்தக மன்னனின் அரசியும், பழுவேட்டரையரின் மகளுமான அருண்மொழி நங்கையின் பரிவாரத்தில் இருந்த பெண் ஒருத்தி கொடுத்த தானத்தை ஒரு கல்வெட்டு கூறுகிறது. இக்கோயிலில் மாசி மக விழா எடுக்கப்பட்டதையும், பிற கொடைச் செய்திகளையும் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கோயிலின் அதிட்டானப் பகுதியில் இராமாயண நிகழ்ச்சியைக் காட்டும் சிறுசிறு சிற்பங்கள் காணப்படுகின்றன.

## டேனிஷ் கோட்டை

மயிலாடுதுறையிலிருந்து பொறையார் வழியாக நாகப்பட்டினம் செல்லும் வழியில் தரங்கம்பாடி என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூருக்கு மயிலாடுதுறையிலிருந்து நேரடியாகப் பேருந்து வசதிகள் உண்டு. உணவகமும், தங்கும் வசதிகளும், மயிலாடுதுறை, காரைக்காலில் உள்ளன. இவ்வூர் "சடங்கன்பாடி", "குலசேகரப்பட்டினம்", "தரங்கை" என பல்வேறு பெயர்களிட்டு அழைக்கப்பட்டுள்ளது. தரங்கம்பாடி கி.பி. 1620 முதல் டேனிஷ்காரர்களின் வாணிபத் தலமாகவும் தொடர்ந்து ஆங்கிலேயர்களின் வாணிபத்தலமாகவும் 19-ஆம் நூற்றாண்டு வரையில் திகழ்ந்து வந்துள்ளது. 17-ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் வாணிபத்தின் பொருட்டு தமிழகம் வந்தடைந்த டேனிஷ் வர்த்தகக் கம்பெனியின் கப்பற்படைத் தளபதி ஒவ் ஜெட்டி (OVE GEDDE) என்பவர் தஞ்சை மன்னன் இரகுநாத நாயக்கனின் அனுமதி பெற்று கி.பி. 1620-இல் தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையை நிறுவினார். இக்கோட்டையிலுள்ள கல்வெட்டு கீழ்கண்டவாறு உள்ளது.

The Dans borc
built by
Ove Gedde
Commander in the
Royal Danish Navy
Roc 1620.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸீகன்பால்கு ஐயர் என்ற டேனிஷ் பாதிரியார் தரங்கம்பாடியில் தங்கித் தமிழுக்கு தொண்டாற்றினார். ஸீகன்பால்கு ஐயர் தம் ஜெர்மன் நண்பர்களின் உதவியால், அச்சுப் பொறியையும் தமிழ் அச்செழுத்துகளையும் பெற்று கி.பி. 1713-ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் அச்சகம் ஒன்றை நிறுவினார். அவ்வச்சகத்தின் மூலம் ஏராளமான தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன. மேலும் இந்தியாவிலேயே முதன் முதலில் காகிதத் தொழிற்சாலை தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கோட்டையைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை பண்டைய சின்னமாய் பாதுகாத்து வருவதோடு இதில் வரலாற்றுக் காட்சிக்கூடம் ஒன்றையும் அமைத்துள்ளது. இக்காட்சிக் கூடத்தில் டேனிஷ் அரசன் கிறிஸ்டியன் என்ற மன்னனின் உருவப் படம் வைக்கப்பட்டுள்ளது. தரங்கம்பாடிப் பகுதியில் தங்கிக்கொண்டு வாணிபம் செய்வதற்குத் தஞ்சை நாயக்க மன்னரிடம் அனுமதி கேட்டனர். அவர் சில நிபந்தனைகளோடு ஒப்பந்தம் செய்து கொடுத்தார். அந்த ஒப்பந்தப் பத்திரம் ஒரு தங்கத் தகட்டில் எழுதப்பட்டு அதன் இறுதியில் இரகுநாத நாயக்கன் என்று மன்னன் தெலுங்கில் கையெழுத்திட்டிருக்கிறான். ஓலைச்சுவடி போன்ற வடிவில் உள்ள இத்தகடு தற்போது டென்மார்க் நாட்டில் அருங் காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதன் புகைப்பட பிரதி ஒன்று இங்கு வைக்கப்பட்டுள்ளது. மற்றும் அக்கால முத்திரை கள் டேனிஷ் கொடியின் வரைபடங்கள், பயன்படுத்திய பீரங்கிகள், இரும்புப் போர்க் கருவிகள் ஆகியவையும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. தரங்கம்பாடியை நிர்வகித்து வந்த கவர்னர்கள் (1624-1845) யார் யார் என்ற பெயர் விவரமும், இக்கோட்டைக்கு வந்து சென்ற கப்பல்களின் பெயரும் இங்கே விளக்கப் பலகையில் எழுதிப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

டேனிஷ் காசுகளும் காட்சிப் பொருளாக இங்கு வைக்கப்பட் டுள்ளன. டேனிஷ் கம்பெனியினர் தரங்கம்பாடியிலேயே காசுகளை அச்சிட்டு வெளியிட்டார்கள். இவற்றில் ஒருபுறம் டேனிஷ் அரசர் பெயரின் முதல் எழுத்தும் மறுபுறம் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி யின் முதல் எழுத்துக்களும் காணப்படுகின்றன. டேனிஷ் காசுகள் பற்றிய விரிவான விவரப் பலகையும் உள்ளது. டேனிஷ் நாட்டுடன் தமிழகம் கொண்டிருந்த தொடர்பு குறித்து அறிந்து கொள்வதற்கு இக்காட்சியகம் உதவியாக அமையும்.

# மதுரை மாவட்டம்

## அரிட்டாபட்டி சிவன் குடைவரைக்கோயில்

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையில் நரசிங்கம் பட்டி என்ற ஊரினை அடைந்து அங்கிருந்து வடமேற்காகப் பிரிந்து செல்லும் சாலையில் சென்றால் அரிட்டாபட்டியை அடையலாம். மதுரையிலிருந்து இவ்வூருக்கு நகரப் பேருந்துகள் செல்கின்றன. அரிட்டாபட்டியிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் மேற்கே நடந்து சென்றால் கழிச்சமனை என்றழைக்கப்படும் குன்றினை அடையலாம்.

இம்மலையின் பண்டைய பெயர் திருப்பினையன் மலை என்ப தாகும். இச்சிறிய குன்றின் மேல்புறத்தில் சிவனுக்காக எடுக்கப் பெற்ற சிறிய குடைவரைக் கோயில் உள்ளது. மலையைக் குடைந்து சிறிய கருவறையையும் அழகாக அமைந்த முன் மண்டபத்தையும் உருவாக்கி இருக்கின்றனர். இக்குடைவரைக்கோயில் முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்தது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டிருக்கிறது. கருவறையில் மலையிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட சதுரமான சிவலிங்கம் காணப்படுகிறது. முன்மண்ட பம் தூண்களின்றி எளிமையாகக் காட்சியளிக்கிறது. குடைவரையின் வெளிப்புறத்தில் தென்பக்கம் விநாயகரின் பெரிய உருவமும் வட புறத்தில் கதையுடன் கூடிய முருகப் பெருமானின் உருவமும் காணப் படுகின்றன. இது முற்கால பாண்டியர் சிற்பக் கலைக்கும் கட்டடக் கலைக்கும் சிறந்த சான்றாகும். இம்மலையின் கீழ்ப்புறத்தில் கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த முனிவர்கள் வசித்த குகைத்தளம் உள்ளது.

இதனை நெல்வேலியைச் சார்ந்த செழியன் அதினன் ஒளியன் என்பவன் உருவாக்கிக் கொடுத்துள்ளான். இதனருகில் அச்சணந்தி என்ற முனிவர் செய்த கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைய வட்டெழுத்துக் கல்வெட்டும் தீர்த்தங்கரரின் சிற்பமும் பாறையில்

காணப்படுகிறது. இத்திருப்பணி செய்ததைப் பற்றிக் குறிப்பிடும் இக்கல்வெட்டிலேயே இம்மலைக்கு திருப்பிணயன்மலை என்றும் இம்மலையமைந்த இவ்வூருக்கு பாதிரிக்குடி என்றும் பெயர் குறிப் பிடப்படுகிறது.

## அழகர் கோயில் வசந்த மண்டபம்

மதுரைக்கு வடகிழக்கே 21 கி.மீ. தொலைவில் அழகர் மலை உள்ளது. மதுரையிலிருந்து நிறைய பேருந்துகள் செல்கின்றன. மதுரையில் தங்குமிடங்களும், உணவு விடுதிகளும் உள்ளன. இம் மலையின் அடிவாரத்தில் அழகர் கோயில் அமைந்துள்ளது. இங்கு கோயில் பெயரும், ஊர்ப் பெயரும் அழகர்கோயில் என்பதே ஆகும்.

அழகர் கோயிலுக்குச் செல்லும் வழியில் தலைக்கோட்டைக்குள் உள்ள மேற்கு நோக்கிய இடிந்த மண்டபமே 'வசந்த மண்டபம்' என்று அழைக்கப்படுகிறது. நாயக்கர் காலத்தது. இம்மண்டபத்தில் உள்ள திருமலை நாயக்கர் உருவம் தென்னிந்தியாவில் உள்ள மிகச் சிறந்த சிற்பங்களுள் ஒன்றாகும். மதுரை, திருப்பரங்குன்றம், திருவில்லிபுத்தூர் முதலான இடங்களில் உள்ள உருவங்களை விட வனப்பிலும், வடிவிலும் இயற்கையான தோற்றத்தோடு இவ்வுருவம் காட்சி தருகிறது. திருமலைநாயக்கரின் மனைவியின் சிற்பமும் இங்குள்ளது. பாதமளவு பட்ர்ந்துள்ள ஆடையில் அலை அலையான மடிப்புகள், ஒவ்வொரு காதிலும் உள்ள நான்கு காதணிகள் குறிக்கத்தக்கன. இன்றும் இப்பகுதி மக்கள் தங்கள் காதுகளில் நான்கு அல்லது ஐந்து இடங்களில் பல்வகைப் பெயருள்ள அணிகளை அணிகின்றனர். ஒவ்வொரு முன் கையிலும் எட்டெட்டு வளைகள். அனைத்தும் முத்துக்களாலான வளைகளே.

திருமலை நாயக்கரின் சகோதரரான முத்தியாலு நாயக்கரும், அவர் மனைவியும் இம்மண்டபத்தில் கூப்பிய கைகளுடன் காட்சியளிக் கின்றனர். தமிழகத்தில் இவரது உருவம் உள்ள இடங்கள் மிகவும் குறைவு. இவர்கள் தவிர நாயக்கரது அரசப் பிரதிநிதிகள் இருவரது சிற்பங்களும் இம்மண்டபத்தில் உள்ளன.

### அய்யாப்பட்டி — 'தருக்காகுடி'

மதுரையிலிருந்து திருச்சி செல்லும் தேசீய நெடுஞ்சாலையில் கொட்டாம்பட்டிக்கு முன்பாக இவ்வூர் அமைந்துள்ளது. மதுரையிலிருந்து பேருந்து மூலம் கொட்டாம்பட்டி முன்பாக உள்ள சிங்கம்புணரி என்ற ஊர் பிரிவுச் சாலையில் இறங்கி மேற்புறம் நடந்து சென்றால் இவ்வூரை அடையலாம். முருகன், விநாயகர், பைரவர் அம்மன் முதலிய துணை தெய்வங்களுக்கு உரிய சிற்றாலயங்களுடன் ஒரு சிவன் கோயில், ஊருக்கு வடபுறம் அமைந்த ஊரணிக்கரையில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுப் பாணியில் எடுக்கப்பெற்றிருக்கிறது. கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றுடன் கூடிய சிறிய கோயிலாக இது கிழக்கு நோக்கின நிலையில் விளங்குகின்றது. இதன் முன்பு பிற்காலப் பாண்டியர் காலத்து நந்திமண்டபம் ஒன்றுள்ளது. இக்கோயில் அர்த்தமண்டபத்தின் நுழைவாயிலும் புறச்சுவர்களுடன் வேலைப்பாடுடன் உருவாக்கப்பெற்றுள்ளது. இக்கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம் ஆகிய பகுதிகளில் ஐந்து பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. இவை பராக்கிரமபாண்டியன், குலசேகரபாண்டியன், வீரபாண்டியன் ஆகிய பிற்காலப் பாண்டியர்களது கல்வெட்டுக்களாகும். இக்கல்வெட்டில் இவ்வூர் 'தர்க்காய்தடி' என்று குறிப்பிடப்படுகின்றது. இச்சிவன் கோயில் 'திருக்கோடீஸ்வரமுடையார் கோயில்' என்று அழைக்கப்படுகின்றது. இக்கோயிலிலுள்ள தனிக்கல்லில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று தர்க்காய்குடியில் இருக்கும் கடகமறுக்கிகள் பால் கலசம் வைத்ததைப் பற்றித் தெரிவிக்கின்றது. வீரபாண்டியன் கல்வெட்டு அவனது காலத்தில் பல்லவராயன் சாருவ பொன்னம்பிள்ளை புலிவிடைவேல் என்பவர் கோயில் காரியம் செய்ய நியமிக்கப்பட்டதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. பிற கல்வெட்டுக்கள் இக்கோயிலுக்கு வழிபாட்டிற்காக நிவந்தம் அளித்ததைப் புலப்படுத்துகின்றன.

### கோவலன்பொட்டல்

மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் செல்லும் வழியில் பழங்காநத்தம் பகுதியில் உள்ளது. பெருங்கற்காலச் சின்னங்களின் அமைவிடமான இவ்விடம் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு

முன்பிருந்தே புதைக்கும் இடமாக இருந்துள்ளது. 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத் துறை இவ்விடத்தில் அகழ்வாய்வினை நடத்தியது. இரண்டு குழிகள் அகழப்பட்டன. குழிகளில் எலும்புகளுடன் கூடிய தாழிகள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒரு தாழியில் கிடைத்த அனைத்து எலும்புகளையும் ஆய்வு செய்ததில் அவை நடுத்தர வயதுடைய ஆணின் எலும்புகள் என்றும் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் அறியப்பட்டது. இத்தாழிகள் தவிர, சங்க காலச் செப்புக் காசு, செப்பு வளையல், நுண்கற்காலக் கருவிகள், புதிய கற்காலக் கருவிகள், எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடுகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. அன்றிலிருந்து இன்றுவரை இவ்விடம் இடுகாடாகவே பயன்பட்டு வந்துள்ளது. சிலப்பதிகாரம் கூறும் கோவலன் இங்குதான் கொலையுண்டதாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது. 'கோவலன் பொட்டல்' என்ற பெயருக்கும் கூறப்படும் செவிவழிச்செய்திக்கும் ஏற்றாற்போல், இவ்விடமும் பெருங்கற்காலச் சின்னங்களோடு அன்றிலிருந்து இறந்தோரைப் புதைக்கும் இடமாகவே இருந்து வருவதால் அச்செய்தி உண்மையாக இருந்திருக்கக்கூடும் என ஊகிக்கலாம்.

## திருமலை நாயக்கர் அரண்மனை

பாண்டியரது தலைநகரான மாநகர் மதுரையில் இன்று எஞ்சி நிற்கும் எழில் வாய்ந்த அரண்மனை திருமலை நாயக்கர் அரண்மனை ஆகும். திருச்சியாக இருந்த தமது தலைநகரினை மதுரைக்கு மாற்றிய பின்பு தாமும் தமது அரசுச் சுற்றமும் வாழ்வதற்காகவும் நாட்டை ஆளுவதற்காகவும் திருமலை நாயக்கர் கி.பி. 1636-இல் இவ்வரண் மனையைக் கட்டி முடித்தார். தென்னிந்தியாவில் இன்றுமுள்ள பழமையான மிகச்சிறந்த அரண்மனைகளில் இதுவுமொன்றாகும். இதனை இத்தாலிய நாட்டு சிற்பியின் துணைகொண்டு உருவாக்கியதாகக் கூறுகின்றனர். இந்திய நாட்டு வைதீக சமயக் கட்டடக்கலையும் இசுலாமியர் கட்டடக்கலையும் இணைந்து கலந்த கலவையாக இவ்வரண்மனையின் கட்டடக்கலை விளங்குகின்றது. உயர்ந்தும் பருத்தும் நிற்கும் பெரும் தூண்களும், அதிலிருந்து தொங்கும் போதிகைகளும் அவை தாங்கும் கம்பீரமான கூடங்களும், அதனுள்

விளங்கும் அழகிய வளைவுகளும் காண்பார் மனதைக் கவர்ந்திழுப் பனவாய் உள்ளன. அரைத்த சுண்ணாம்பில் கடுக்காய், வெல்லச் சாறு விட்டு கலந்து கலவை தயாரித்துப் பூச்சு பூசப்பெற்றுள்ளது. தூளாக்கி அரைத்த வெள்ளைக்கல், சுண்ணாம்பு பூச்சுக்களின் மீது முட்டையின் வெள்ளைப் பகுதியைத் தேய்த்து இதன் தூண்களும், சுவரும் வழவழப் பாகவும் பளபளப்பாகவும் மெருகேற்றப்பெற்றிருக்கின்றன. இவ் வரண்மனையின் விதானங்களிலும், மேற்சுவர்களிலும் மிக நுண்ணிய முறையில் சுதையுருவங்களும், மலர்த் தோரணங்களும், பிறவேலைப் பாடுகளும் காணப்படுகின்றன.

தற்போது ஐந்து ஏக்கர் ஐயாயிரத்துப் பத்து சதுர அடிப் பரப் பளவில் விளங்கும் இவ்வரண்மனை தொடக்கக் காலத்தில் இதனை விட நான்கு மடங்கு பெரியதாக விளங்கியிருக்கின்றது. திருமலை நாயக்கரின் காலத்திற்குப் பின்பு அவரது பெயரன் மதுரையாக விளங்கிய நாயக்கர் தலைநகரினைத் திருச்சிக்கு மாற்றியதால் இவ்வரண்மனையின் சிறப்புக் குன்றியது. பிற்காலத்தில் இது பேணுவாரற்றுக் கிடந்தது. காலத்தின் கோலத்திற்கும் பெருமழை மற்றும் இயற்கையின் சீற்றத்துக்கும் இரையாகி, தற்போதுள்ள பகுதி மட்டும் எஞ்சி நிற்கின்றது. இன்று உள்ள அரண்மனைப் பகுதிகள் நாயக்கரின் அரசவை, நாடகசாலை, பள்ளியறை, பூசையறை என்ற பகுதிகளாகும். இவற்றில் அரசவைப் பகுதி பார்ப்போருக்கு வியப்பைத் தூண்டும். நாடகசாலை தமிழ்நாட்டில் அமைந்த பழம் பெரும் நாடகசாலைகளில் மிக அழகிய நுட்பமான சுதை வேலைப் பாடு கொண்டதாகும். எங்கு நோக்கினும் கம்பீரமான தூண்கள் நிறைந்து விளங்கும். இவ்வரண்மனையில் தற்போது சிறியதும் பெரியதுமாக இருநூற்று நாற்பத்தெட்டுத் தூண்கள் உள்ளன.

நாயக்கர் காலத்தில் இவ்வரண்மனைப் பகுதிகள் சொர்க்க விலாசம், ரங்கவிலாசம் என்ற இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண் டிருந்தது. சொர்க்கவிலாசத்தில் திருமலை நாயக்கரும் ரங்கவிலாசத் தில் அவரது தம்பி முத்தியாலு நாயக்கரும் வாழ்ந்துள்ளனர். இவ் விரண்டு விலாசங்களைச் சூழ்ந்து பாரிமதிள் என்ற பெரும் மதிள்

ஒன்று எடுக்கப்பெற்றிருந்தது. இது கிழக்கு மேற்காக முன்னூறு மீட்டர் நீளமும், வடக்குத் தெற்காக இருநூற்று இருபது மீட்டர் நீளமும் கொண்டிருந்தது. ரங்கவிலாசம் என்ற பகுதி அரண்மனையின் வடகிழக்குப் பகுதியாக விளங்கிற்று. இதன் தென்கிழக்கில் அரண்மனையின் பழைய நுழைவாயில் அமைந்திருந்தது. அதனைக் கடந்து வரும்போது ''நவ்பத்கானா'' என்றழைக்கப்பட்ட பதினெட்டு வகையான இசைக் கருவிகள் வைக்கும் இடமிருந்தது. அதற்குத் தெற்கே முத்தியாலு நாயக்கனின் வாழ்விடமும் 'கந்திரிகைமேடை' என்றழைக்கப்பட்ட மேடை ஒன்றும், நாயக்கரின் குலதெய்வமான 'இராசராசேசுவரி' கோயிலும் இருந்தன. தற்போது இந்த ரெங்க விலாசம் இருந்த பகுதியில் மிஞ்சியுள்ளது மிக உயரமாகப் பருத்த நிலையில் விளங்கும் பத்துத் தூண்கள் மட்டுமேயாகும். இவற்றைக் கடந்து தெற்கே வந்தால் தற்போது எஞ்சியுள்ள அரண்மனைப் பகுதிகளைக் காணலாம். இதன் கிழக்காகவுள்ள, வெள்ளையர் காலத்தில் புதிதாக உருவாக்கப்பெற்ற தற்காலத்து அரண்மனை நுழைவாயிலைக் கடந்து வந்தால் திருமலை நாயக்கர் அமர்ந்து ஆட்சிபுரிந்த அரசுகட்டிலிருந்த அரசவைப் பகுதியினையும், அதன் முன்னர் அமைந்த பெரிய முற்றத்தினையும் காணலாம். இவ்வரசவையின் தென்மேற்கே பூசையறையும், வடக்கே நாடகசாலையும், பள்ளியறையும் உள்ளன. இக்கட்டடங்களுக்கு மேல்திசையிலேயே அழிந்துபோன வசந்தவாவி, அந்தப்புரம், அரசு அதிகாரிகள் வாழ்ந்த மனைகள், யானை, சேவற் போர்கள் காணுமிடங்கள், படைக்கலன்கள், முரசுகள் வைக்கும் இடங்கள், தோட்டங்கள் முதலியன இருந்தன.

இவ்வரண்மனையில் நாயக்கர் காலத்தில் நவராத்திரி விழா, செங்கோல் விழா போன்ற பெருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. சேத்ரையா போன்ற தெலுங்குப் புலவர்கள் இங்குள்ள அரசவைக்கு வந்து திருமலை நாயக்கரிடம் பாடிப் பரிசில்கள் பெற்றிருக்கின்றனர். இராபர்ட்-டி-நொபிலி போன்ற புகழ்பெற்ற கிறித்துவத் துறவிகள் நாயக்கருக்கு மேலைநாட்டுப் பொருள்களை அன்பாக அளித்து அவரிடம் வெகுமதியும், கிறித்துவத்தை நாயக்கர் நாட்டில் பரப்ப வாய்ப்பும் பெற்றுத் திரும்பியிருக்கின்றனர்.

இவ்வரண்மனை வெள்ளையர் காலத்தில் அச்சுக்கூடமாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகமாகவும், அண்மைக்காலம் வரை நீதி மன்றமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. கி.பி. 1882-இல் சென்னையில் கவர்னராக விளங்கிய நேப்பியரால் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் அளவு செலவு செய்து அரண்மனையின் தற்போதுள்ள பகுதிகள் பாதுகாக்கப்பெற்றிருக்கின்றன. அதன் பின்பு கி.பி. 1971-இல் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இவ்வரண்மனையை வரலாற்றுச் சின்னமாக அறிவித்து இதன் எழிலையும் பழமையையும் பெருமையையும் சிறந்த முறையில் பேணிப் பாதுகாத்து வருகிறது.

### பத்துத் தூண்கள் - மதுரை

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையையொட்டி வடபுறம் அமைந்துள்ள 'நவ்பத்காணா தெரு', 'மகால் வடம் போக்கித் தெரு' ஆகிய இரு தெருக்களின் இடையே பத்துத்தூண் சந்து என்று ஒரு குறுகிய தெரு உள்ளது. இதன் நடுவே சுற்றிலும் வீடுகள் அமைந்திருக்க பத்து தூண்கள் மட்டும் நிற்கின்றன. இவை பார்வையாளர் எவரையும் வியப்புக்குள்ளாக்குபவை. இத்தூண்கள் இன்றைய திருமலை நாயக்கர் அரண்மனையின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் திறந்தவெளி முற்றத்தில் உள்ளவை போன்று உயரமான தூண்கள் ஆகும். கருங்கற்களை அடுக்கிக் கட்டப் பட்டவை இத்தூண்கள். இவ்விதத் தூண்களின் மீது சுதையும், வெண்சுதையும் பூசப்பட்டே இன்று அரண்மனையில் உள்ள தூண்கள் விளங்குகின்றன. இத்தூண்கள் அன்று 'இரங்கவிலாசம்' என்ற அரண்மனைப் பகுதியின் மைய முற்றத்தில் அமைந்தவை. இவை அன்று திருமலை நாயக்கர் அமைத்த அரண்மனை எவ்வளவு விரிவானது என்பதை உணர்த்தக்கூடியவை.

### வரிச்சியூர் - உதயபுரீஸ்வரர் கோயில்

மதுரையிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில் 12 கி.மீ. தொலைவில் வரிச்சியூர் உள்ளது. இங்கிருந்து பிரியும் சாலை யில் சென்றால் உதயகிரி என்ற குன்றத்தூர் மலையை அடையலாம். இங்கு இயற்கையாக அமைந்த குகைத் தளத்தில் கற்படுக்கைகள் உள்ளன. இக்குகைத்தளத்து நெற்றிப் பாறையில் 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைத் தமிழ்க் கல்வெட்டு

உள்ளது. சிதைந்தும் மிக உயரத்திலும் உள்ளதால் இதனைப் படிப்பது சிறிது கடினம். அக்கல்வெட்டு :—

1. ......... பளிய் கொடுபி......

2. ...... டா ... இதா (வை) னுறகாலனே......

என்பதாகும். இது தவிர தெளிவில்லாத கி.பி. எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றும் இங்குள்ளது.

இம்மலைப் பகுதியில் இரண்டு குடைவரைக் கோயில்கள் உள்ளன. மலையின் மேல்புறம் ஒன்றும், கீழ்புறம் ஒன்றுமாக இரண்டு குடைவரைக் கோயில்கள் சிவனுக்காக எடுக்கப் பெற்றுள்ளன. இவற்றை உதயகிரீஸ்வரர் கோயில் என்று அழைக்கின்றனர். சிவலிங்கத்தை அடக்கிய சிறிய கருவறையுடன் இக்குடைவரைக் கோயில்கள் எளிய முறையில் உருவாக்கப் பட்டுள்ளன. இம்மலையின் மேற்புறம் அமைந்த குடைவரையில் வெளிப்புறத்தில் முற்காலப் பாண்டியர் காலத்துக் கட்டடக் கோயி ஒன்றின் அமைப்பு புடைப்புச் சிற்பமாக காட்டப்பெற்றுள்ள குறிப்பிடத்தக்கது. இவ்விரு குடைவரைக் கோயில்களும் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டுள்ளன.

### வரிச்சியூர் - அஸ்தகிரீஸ்வரர் கோயில்

உதயகிரீஸ்வரர் கோயிலுக்கு மேல்புறம் மற்றொரு சிறிய குன்று உள்ளது. இக்குன்றில் உதயகிரீஸ்வரர் கோயில்களை விட சிறப்பு வாய்ந்த-அவற்றை விடப் பெரிய அளவில் எடுக்கப்பெற்ற குடைவரைக் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலும் சிவபெருமானுக்காக எடுக்கப்பெற்றதாகும். கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இக்குடைவரை, கருவறை, முன் மண்டபத்துடன் விளங்குகின்றது. கருவறை வாயிலின் இருபுறமும் இரண்டு வாயிற் காவலர்கள் உருவங்கள் காட்சி அளிக்கின்றன. முன் மண்டபத்தினையொட்டி பாறையில் சப்த கன்னியர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செய்விக்கப்பெற்றுள்ளன. இக்குடைவரைக் கோயிலின் வெளிப்புறத்தில் இக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற தானங்களைத் தெரிவிக்கும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன.

★